# வீசும் விலக்ஷணம்



டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா

ஓம்

தத் ஓம் ஸத்

# வீசும் விலக்ஷணம்


தொகுப்பாசிரியர்

டாக்டர் திருமதி **அனந்தகிருஷ்ணா**



ஸ்ரீ விலக்ஷணானந்தரின் 122ஆம் ஆண்டு
ஜெயந்தி விழாவையொட்டி பிரசுரிக்கப்பட்டது
**22-1-2017, ஞாயிற்றுக்கிழமை**


வெளியீடு

**யோக ப்ரயாகா**

12/16, டானியல் தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

தொலைபேசி : 2245 0119 கைபேசி : 92821 04459



## ஆசிரியரின் எண்ண அலைகள்

ஸ்ரீ ஸ்வாமி விலக்ஷணானந்தரின் சீடையாகிய நான், என் கணவர் திரு. மேஜர் மூர்த்தி அவர்களுக்கு, ஸ்ரீ ஸ்வாமிகள் இந்த ஜெயந்தி பூஜையை எங்கள் இல்லத்தில் நடத்தப் பணித்ததும் அவருடைய அன்பார்ந்த ஒத்துழைப்பாலும் திரு. கோவிந்தராஜன் அவர்களுடைய ஆசியுடனும் எங்கள் இல்லத்தில் இத்துடன் சுமார் 18 ஜெயந்தி பூஜைகள் நிறைவு பெறுகிறது.

என் கணவரின் ஸ்தூல சரீரமில்லாமல் அவர் ஆன்மாவின் ஆசியுடன் இம்முறை இப்பூஜை நடைபெறுகிறது. குருவின் திருவடிகளில் அவர் இளைப்பாறுவதை நான் எள்ளளவும் சந்தேகமின்றி உணருகின்றேன்.

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராபிக்ஸ்**
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி : 2813 1102

ஓம்
தத் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்தர் சமுக பஞ்சரத்னம்

## திருவருட் சமுகத் துதி

அடியாற்கடியன் ப. ஷண்முக முத்தையா்

### விநாயகர் துதி

ஓங்கார சொரூபனாம் ஒற்றைக் கொம்பனை
ஆங்கார மற்றகம் பாவங் களற்றுமே
சாங்கோப சாங்கமாய் சமுகத் துதிசெய
பாங்காய்ப் பதமலர் பணிந்து போற்றினேன்.

### முருகன் துதி

உள்ளத் துறையும் உபாசனா மூர்த்தியை
வள்ளிக் குகந்த மணாளனை வணங்கியே
விள்ளற் கரிய விலக்ஷணானந்தரின்
தள்ளொணா சமுகத் துதியினை யியற்றுவாம்.

### சற்குரு துதி - வெண்பா

அத்தரங்க வத்வைத வப்பிரமே யவ்வகில
அந்தரார்த்த வோங்கார வந்தர்ப்பூ - தந்தன்
வடிவே கடவுள் மதமென்னக் கூறும்
அடி! தா! விலக்ஷணானந்தா!

# ஸ்ரீ விலக்ஷணானந்தர்
## சற்குரு சமுகத் துதி
(16 அடி 112 சீர்)

(1)

உலகெங்கு நிறைந்ததா யுபசாந்த வுண்மையாய்
ஊழிதொறும் நின்ற சமுகம்
உண்மையாங் காம்பீர்ய பரிசுத்த ஞானத்தை
உளமதிற் கொண்ட சமுகம்
உயர்பக்த கருமமந் திரராஜ வமலமன
யோகமதைப் பெற்ற சமுகம்
உயர்வற்ற கற்பனா சாத்திர வெறுப்பையுளம்
உறுதியா யுடைய சமுகம்.
அலகிலா ஜாதிமத தூலவா சாரங்கள்
அடியோடு விட்ட சமுகம்
ஆதிவருணாச்சிரம தருமங்கள் ஞானமாய்
அமர்ந்திடிற் கொண்ட சமுகம்
அடிக்கடி மாறிவரு மானந்த மார்க்கத்தை
அற்பமென் றோட்டு சமுகம்
அனைவர்க்கு முண்மைதனை யபேதமாய்ப் புகட்டிட
ஆற்றல்கொண் டுற்ற சமுகம்.
நிலவுலகி லெழுவகைத் தோற்றத்திற் குண்மைநிலை
நிறுவவரு ளுற்ற சமுகம்
அநிலையான மோக்ஷமுற முத்தேக நிறைவன
நெறிதெய்வ மென்ற சமுகம்
நிலமதே கம்வாட்டி நீண்முத்தி பெறுமறிவை
நிலைத்திடா தொழித்த சமுகம்
நேரினி லீச்சரன் புகலினும் யுக்திக்கு
நிகரறில் நீக்கு சமுகம்.



அலகிலா வனுபவந் தனையந்த ரங்கத்தி
லாணையாய்க் கொண்ட சமுகம்
அருஞ் செழிய செங்கமல மலரிலுறை தேவிபதி
அடியை யுட்கொண்ட சமுகம்
ஆனதால் ஷண்முக முத்தையன் மும்மல
மகற்றியாட் கொண்ட சமுகம்
அரும் விலக்ஷணானந்தர் சமுகமே சமுகமாம்
அகிலமதில் வாழ் சமுகமே.

(2)

ஆதியிற் பதிபசு பாசமுன்றின் முறையை
அடைவாக கொண்ட சமுகம்
ஆத்மாவின் பிறப்பிறப் பகன்றிட விதிப்படி
யானமுறை புரியும் சமுகம்
ஆனமதாந் தரங்கபகி ரனுஷ்டான மனமொன்றா
யாக்குமாமென்ற சமுகம்
அருந்தேவர் தத்வங் களுக்கான பேதமதை
அனுபவித் தறிந்த சமுகம்.
சாதியிலுயர் ஞானி தாழ்ந்தோரஞ் ஞானியென
சாதனை களேற்ற சமுகம்
சதாதூல வாகார விடயத்தில் விழிப்புடன்
சாக்கிரதை பெற்ற சமுகம்
சடசீவ பிரபஞ்ச பேதமதை சீவவியற்
சார்பினா லேற்ற சமுகம்
சரீரமின் றோராத்மா தேசமறை பொது பக்தி
சதாநினைவில் பூண்ட சமுகம்
தீதிலா வுண்ணெறி பெருக்கிபகி ரங்கநெறி
தேய்ந்துவிடப் பார்க்கும் சமுகம்
தேசமத விசாரணை செய்துண்மை தத்வமதை
தேர்ந்தேற்று கொண்ட சமுகம்

தெளிபார மார்த்தீகந் திரணமும் வெறுப்பின்றி
திடவசனம் பேசு சமுகம்
தீர்க்கமா மியற்கையிற் சேர்க்கையில் நம்பிக்கை
திரணமு மிலாத சமுகம்
பேதியா துளமப்பி யாசவனு பவத்தினிற்
பீடிகழ் பெறாத சமுகம்
பேராழி ஸ்ரீனிவாசப் பெருமானுள மதைப்
பேணிதுணை கொண்ட சமுகம்
பிரியமுள ஷண்முக முத்தையன் பிறப்பினில்
பெருந்தயை கொண்ட சமுகம்
பேர் விலட்சணானந்தர் சமுகமே சமுகமாம்
பேருலகில் வாழ் சமுகமே.

(3)

தேசகார ணரேதஸ் சேதமாம் பண்டமுணத்
தேவயிலை யென்ற சமுகம்
திடஞான சாதனத் தேகங்கள் பின்னமுறச்
செயப்படா தென்ற சமுகம்
திண்ணமாய்ப் பிரதியுபகாரமுறு காரியம்
தீதுற்ற தென்ற சமுகம்
தேகநோய்த் தந்தாட்டும் மதுமாம்சம் விட்டுவிட
தெளிவாயுரைத்த சமுகம்
யோக ஞானார்த்தத்தை யொருவர்க்கு மறைப்பின்றி
யுரைத்தொளிர் சுபாவ சமுகம்
யோகஜோ திடவாத வைத்யமந்திர ஜாலம்
யோட்டு சந்நியாச சமுகம்
யூகவுப நிடதமறை பிரமசூத் திரகீதை
யுரைகொளா யுக்தி சமுகம்
யுகநடுவி லுண்டாகும் வேதமத மெதுவாயி
னோங்கிடா தென்ற சமுகம்



ஆகமப் படிதெய்வ வருமஹானடி யார்க்கு
வந்தரங்கத்தில் சமுகம்
ஐந்தெண்ண மொடுவைந்து வஷ்டாங்க நமஸ்காரம்
அன்பொடுசெய் யென்ற சமுகம்
ஐப்புலச் சாந்தியோர் ஐந்து சங்கற்பமாய்
அறிவிற்செய் யென்ற சமுகம்
அமிர்தகுண ஞானிக்திவ குபந்த மியாதொன்றும்
அடைந்திடா தென்ற சமுகம்
ஏகமாம் வஸ்துவே யெழுவகை யினுட்புறத்
திலங்கு மென்றோங்கு சமுகம்
எந்நாளு மேகாந்த நிலைபெற்று ஜீவர்க்கு
ஏற்ற குருவான சமுகம்
எந்தை நீ ஷண்முக முத்தைய னெனதுயா
னெனுமகந் தீர்த்த சமுகம்
ஏர் விலட்சணானந்தர் சமுகமே சமுகமாம்
எஞ்ஞான்றும் வாழ் சமுகமே.

(4)

தினகரன் சந்தியில் திருமந்த்ர பாசுரம்
தினத்துதி யென்ற சமுகம்
திவ்யபா ராயணந் தினமோய்ந்த வேளையில்
செய்துவா வென்ற சமுகம்
தினமிரு முறையன்றி திண்ணமோர் முறைதுதி
தெய்வ புகழென்ற சமுகம்
தெய்வீக கவதார புருஷரை யெதிர்நோக்கும்
தெய்வமத மென்ற சமுகம்.
மனதற மந்திர ஸ்னானகுரி யாசனம்
மாணுடைய தென்ற சமுகம்
மஹா மந்திரங்களை மும்மூன்று முறையாக
மனதாற்செய் யென்ற சமுகம்

மஹத்தான நோக்கத்தி லாண்பெண்க ளியாவரும்
மறையோத செய்த சமுகம்
மாகடவுள் மதவுண்மை மந்திரத் தூதர்கள்
மண்ணெங்கு மோது சமுகம்.
ஜனசகல மதவேத குருநோக்க மட்டிலுஞ்
சார்ந்தேற்று கொண்ட சமுகம்
சாதனப் பொருண்மாறு மென்று கடவுண்மதம்
சார்ந்திடா தென்ற கொண்ட சமுகம்
சகலான்ம கோடிகளு மேகமாய் வணங்கிடுஞ்
சத்தாமென் றேத்து சமுகம்
சாந்தியிலு தயமாய் சச்சிதானந்தத்திற்
சார்ந்தோங்கு மென்ற சமுகம்
தனகனக சம்சார தாய்தந்தை மனைசுற்றம்
தடையென விட்ட சமுகம்
தனதடிச் சேர்ந்தோரை தமோகுண மறுத்தாண்டு
தாளிணை யீந்த சமுகம்
தந்தை நீ ஷண்முக முத்தையன் தமசினை
தடித்தாண்டு கொண்ட சமுகம்
தா விலட்சணானந்தர் சமுகமே சமுகமாம்
தரணிதனில் வாழ் சமுகம்.

(5)

சுத்தபர பிரஹ்மமே தொல்லுலகி லென்னாளும்
தோன்றிவரு மென்ற சமுகம்
தொல்லுலகில் ஞான சக்கிரவர்த்தி யாகவே
தோன்றியது விந்த சமுகம்
தொழுதேற்று மத்வைத யருட்கவி யரசாகி
தோன்றியது விந்த சமுகம்
தூயபரி சுத்தமாய் துவந்துவ மற்றதாய்
தொன்மை குருவரச சமுகம்



வித்தக விலக்ஷணானந்தரே வுயர்வேத
விதையாக வந்த சமுகம்
விண்ணிலும் மண்ணிலும் வேதவிதை விதைத்துமே
விளைவிக்க வந்த சமுகம்
விளங்கிட வசனித்து வேதனூற் பலவாக்கி
விசுவசித் தீந்த சமுகம்
விழுமியோர்க் கென்று கடவுண் மதபுத்தகம்
வெளிப்பட யீந்த சமுகம்.

நித்திய மானபல மந்திர சக்தியின்
நிலைகாட்டி யீந்த சமுகம்
நேராக வுபதேச ஜெபமாலை நோட்டுமே
நெறிகாண வீந்த சமுகம்
நேரான தருமநெறி குறைந்திடும் போதெலாம்
நேர்ந்துவரு மிந்த சமுகம்
நிமிடமும் வந்தபணி நிற்காமல் நிகழ்ந்திட
நெடுந்தவம் செய்த சமுகம்.

பத்தகர்கட் கற்புதம் பன்முறை காட்டியே
பாரினி லுயர்ந்த சமுகம்
பணிவாக முநிவரென சித்தரென விருடியென
பாருளோர் போற்று சமுகம்
பண்ருட்டி ஷண்முக முத்தையன் சமுகத்தை
பரிவுடன் கொண்ட சமுகம்
பண்பாகும் விலக்ஷணானந்தகுரு சமுகமே
பாரினில் வாழ் சமுகமாம்.

– சுபம் –

ஓம்

தத் ஓம் ஸத்

**ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ**

திருவாய் மலர்ந்தருளிய

# ஞானாசாரம்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஞானாசாரம்

1. பரமாத்மா ஜீவாத்மா சொருபங்களின் உண்மைகளை அறிவிக்கக் கூடிய யதார்த்தமான அனுபவ சாஸ்திரங்களை மஹான்கள் சன்னிதானத்தில் நாடோறும் நிஷ்காம புத்தியுடன் சிரவணஞ் செய்து வர வேண்டும்.

2. வேதத்திற் கூறப்பட்டதும் அவஸ்யமானதும் மஹரிஷிகளால் அங்கீகாரம் பண்ணப்பட்டதும் ஞான சாதனமாயுள்ளதுமான புண்ணிய கர்மங்களைப் பிரஹ்மத்தை முன்னிட்டுக் கொண்டு செய்ய வேண்டும்.

3. சகுண நிர்க்குண வடிவங்களை அந்தந்த முறைப்படி அந்தக்கரணத்தில் உபாசித்து வரவேண்டும்.

4. அனித்திய பிரபஞ்ச ஆசாவடிவ காமிய கர்மப் பிரயோஜன எண்ணங்களை அகற்றிவிட வேண்டும்.

5. ஷட்வித லிங்க தாத்பர்யங்களின் அந்தரங்கங்களைத் தெரிந்தபின் ஞான சாஸ்திர சிரவணஞ்செய்ய ஆரம்பிக்க வேண்டும்.



6. பாப புண்ணியங்களை உதறித் தள்ளிவிட்டு மீண்டும் வராதபடி ஸ்திரமாக நின்று கொள்ள வேண்டும்.

7. பிரஹ்மப் பிரதிபிம்ப ஜீவாத்மாவைப் பிரஹ்மமாகவே பாவிக்க வேண்டும்.

8. ஞான மோக்ஷ சாதனமான கேள்விகளையே மஹான்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

9. நித்தியத்தில் தர்க்கிக்க இடமில்லையென்றும் அனித்தியத்தில் தர்க்கித்துப் பிரயோஜனமில்லையென்றும் எண்ணி இந்த இரண்டுவித தர்க்கங்களையும் விட்டொழிக்க வேண்டும்.

10. எண்பது வயதும் அவலக்ஷணமும் அருவருப்பும் விருத்தாப்பியமும் தளர்ச்சியுமான ஸ்திரீயைப் போலவே பதினாறு வயதும் சம்பூர்ண லக்ஷணமும் அதிக விருப்பமும் அதிபால்யமும் கெம்பீரமுமான ஸ்திரீயை நினைத்துப் பழகி வரவேண்டும்.

11. ஜனன மரண துக்கங்களையும் அதன் ஆதிகால குற்றங்களையும் தினந்தோறும் விசாரித்து வரவேண்டும்.

12. சுத்த சாந்த பரம சைதன்ய பிரஹ்மத்தையன்றி வேறொன்றுமில்லை யென்ற திட நிச்சயத்தோடு பிறிவின்றிய நித்திய சொருபத்தை அடைவதற்கு உண்மையாக ஆசைப்பட வேண்டும்.

13. குடும்ப சுக துக்கங்கள், சம்சாரக் கட்டுப்பாடுகள், ஜாதிபேத நீதிகள், மாயா அவித்யா பந்தங்கள், சரீர

உலகக் கவலைகள், மதச் சண்டைகள் இவை களினின்றும் குதித்து ஓடவேண்டும்.

14. சகுண ஈஸ்வர சொரூப நாட்டத்திலேயே சதா ஹிருதய நிதானத்தை நிறுத்த வேண்டும்.

15. சத்துவ வடிவமான பிரஹ்மத்தை உண்மையா யறிந்தவரும் அறியப்போகிறவரும் அறிபவரும் சத்தில் திடநிச்சய புத்தியடையவருமான சாதுக் களின் கூட்டுறவைத் தேட வேண்டும்.

16. சுவானுபவ மூர்த்தியை ஏகாந்த ஸ்தானத்தி லிருந்து கொண்டு உபாசிக்க வேண்டும்.

17. கர்மயோக ரகஸ்யம் உபாசனா ரகஸ்யம் ஞானயோக ரகஸ்யம் இவைகள் பிரஹ்ம ரகஸ்யத்தை பற்றியே இருக்கின்றன வென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

18. மஹா சாந்தம் உபசாந்தம் சாந்தம் மோனம் இவை களைப் பழகி வரவேண்டும்.

19. பரவஸ்துவின் நிச்சயத்தையும் அபர வஸ்துவின் அநிச்சயத்தையும் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

20. திரிவித கரணங்களாற் செய்யப்பட்ட எந்தக் கர்மங் களானாலும் குற்றமென்று நீக்கிவிட வேண்டும்.

21. ஜனன மரணங்களுக்கு ஏதுவாகிய செயல்களெல் லாம் கர்மமென்று கண்டு கொள்ள வேண்டும்.

22. சர்வஞான சர்வகுண சர்வசம்பன்ன சர்வாசார சர்வசத்வ சர்வசாந்த சர்வபோத சர்வமோன



சர்வநிஷ்ட சதாசர வடிவராகிய பரமாசாரியரது பாதார விந்தங்களைத் தேட வேண்டும்.

23. மேலான மஹான்களது சிசுருஷைகளை அந்தரங்க பக்தியுடன் மோக்ஷ ஞான இச்சையோடு டம்ப மின்றிச் செய்ய் வேண்டும்.

24. நாம் அடையப்போகிற பிரஹ்ம ஞானத்திற்குத் தடை செய்பவர்கள் எவராயிருந்தாலும் தாக்ஷண்ய மின்றி விலக்கிவிட வேண்டும்.

25. பிரணவ மந்திரத்தைப் பிழையின்றி அதன் அர்த்தங் களை குரு உபதேசிக்கப் பெற்றுக் கொண்டு ஏக்கமின்றி ஒரே புத்தியுடன் ஜெபிக்க வேண்டும்.

26. வேத வாக்கியங்களிலும் அதன் அர்த்த விசேஷங் களிலும் பூர்ண நம்பிக்கை வைக்க வேண்டும்.

27. விருப்பு வெறுப்புகளை அடியோடு விலக்கிவிட வேண்டும்.

28. பூரண ஞானிகளான ஜீவன் முத்தர்களது திருவாக் கினின்று புறப்படக் கூடிய வாக்கியங்கள் உபநிஷத் சாரமென்று எண்ண வேண்டும்.

29. பிரஹ்மத்தை நேரே அறிவிக்கக் கூடிய மஹா வாக்கியார்த்த விசாரணை செய்ய வேண்டும்.

30. வேத சம்மதமான மதங்களையும் அதன் அங்கீகாரம் பெற்ற கர்மங்களையும் கைப்பற்ற வேண்டும்.

31. அஷ்டமா சித்திகளின் ஆசை, வாத ரசாயன இச்சை, மயக்க மதங்கள் இவைகளை அகற்றிவிட வேண்டும்.

32. பேசுவதிலும் பிறருக்குச் சொல்வதிலும் காலத்தைக் கழிக்காமல், அனுபத்திலும் அப்பியாசத்திலும் ஆரூடத்திலும் காலத்தைச் செலுத்த வேண்டும்.

33. அபிப்பிராயம் கொடுப்பதைவிட அபிப்பிராயம் வாங்குவதிலேயே நோக்கமாயிருக்க வேண்டும்.

34. ஆத்ம சமரஸமான எண்ணத்தால் நல்ல ஹிருதய சுபாவத்துடன் கெட்ட சுபாவமான குதர்க்கங்களை விட்டுவிட வேண்டும்.

35. வேதத்திற்கும் வேத புருஷனுக்கும் மஹரிஷிகளுக் கும் பொருத்தமான தர்க்கங்களை விரும்ப வேண்டும்.

36. சகல தத்துவங்களையுந் தள்ளி சத்திய சொருபமான ஆத்மாவை நாமென்று நிச்சயமாக எண்ண வேண்டும்.

37. மனத்திலுள்ள கர்வத்தைத் தினந்தோறும் நீக்கி வரவேண்டும்.

38. தேகம் நானென்ற அனாத்மபுத்தி வராதபடி அதி ஜாக்ரதையாயிருந்து கொள்ள வேண்டும்.

39. மனோவிருத்தியில் தானே சந்தித்த விஷயங் களுக்கு ஆலோசியாது இடந்தராதபடி இருந்து கொள்ள வேண்டும்.

40. மஹான்களிடம் வாதஞ் செய்ய வேண்டுமென்ற புத்தியை விட்டுவிட வேண்டும்.



41. ஈஸ்வரராலாக்கப்பட்ட பிரபஞ்ச வஸ்துக்களையும் அன்னத்தையும் அளவு கடந்து உபயோகிக்கக் கூடாது.

42. சக்கிரவர்த்திகள் முதல் பிக்ஷைக்காரர்கள் வரை எல்லோரும் புசிக்கிற அன்னம் பரமேஸ்வரரால் இடப்பட்ட பிக்ஷையென்றெண்ண வேண்டும்.

43. அன்னங்களையும் அதன் சாதனைகளையும் மருந்து போலெண்ணிச் சாப்பிட வேண்டும்.

44. கோபம் அஞ்ஞான ஜீவகாருண்யம் அநித்தியத்தில் விஸ்வாஸம் இவைகளை விட்டுவிட வேண்டும்.

45. ஞானமடைவதினிமித்தம் சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேனென்றும், அதற்காக அன்னம் புசிக்கிறே னென்றும் எண்ண வேண்டும்.

46. பலாத்காரமாக எதையும் அனுபவித்தலும், எண்ணுத லும், புசித்தலும், பேசுதலும், நடத்தலும் இல்லாத நிலைமையில் நம்மை நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

47. பிராப்த கர்மபலத்தால் பகவானுடைய ஆக்ஞையால் அளிக்கப்பட்டவைகளைக் கொண்டு பரம திருப்தர் களாயிருக்க வேண்டும்.

48. ஆத்மாவையன்றிய அனாத்மப் பிரபஞ்சங்களில் அலக்ஷிய புத்தியுடன் இருந்து கொள்ள வேண்டும்.

49. சகல கர்மங்களுக்கும் அதிபதி ஈஸ்வரனென்றும், அதன் சகல பலன்களையும் அன்னவருக்கு மனப் பூர்வமாக அர்ப்பணஞ் செய்து வர வேண்டும்.

50. அன்னிய ஜீவர்களுக்குச் செய்யும் உபகாரமும் அபகாரமும் தனக்கே செய்துகொண்டதாக எண்ண வேண்டும்.

51. பசி, தாகம், துக்கம், கோபம் இவைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

52. பிரயோஜனமற்ற வார்த்தைகளைக் கண்டிப்பாக நிறுத்திவிட வேண்டும்.

53. பரிசுத்தமான இடத்தில் சௌக்கியமான சுகாதானத்தி லிருந்து கொண்டு ஹிருதய ஓட்டத்தை நிறுத்திப் பழக வேண்டும்.

54. ஆரம்பத்தில் பகிர்முக ஏகாந்தத்தையும் அப்யாஸத் தில் அனுபவ ஏகாந்தத்தையும் ஆரூடத்தில் அகண்ட ஏகாந்தத்தையும் அங்கீகரிக்க வேண்டும்.

55. அதிசூக்ஷ்ம அகண்ட வஸ்துவினிடத்தில் மனதைக் கறையப் பண்ண வேண்டும்.

56. ஈஸ்வர கிருபை குரு கிருபை இவைகளின் மூல மாகத் தனது கிருபை சுத்த மாயையின் கிருபை இவைகளைப் பெற முயல வேண்டும்.

57. பிரஹ்ம ஞான திட நிச்சயத்தால் பிரபஞ்சத்தை வாதம் பண்ணி ஜெயித்ததாக எண்ண வேண்டும்.

58. ஆரம்ப கர்மம், அப்பியாச கர்மம், பிரபல கர்மம், பிரபஞ்ச கர்மம், விசிரித கர்மம் இவைகளை ஞானாக்கினியினால் எறித்துவிட வேண்டும்.

59. ஞான விரோதமான சங்கங்கள் எதுவாயிருந்த போதிலும் விட்டுவிட வேண்டும்.



60. ஞானப்பியாசிகள் உலகத்தார்களுக்குப் போதிக்கவா வது உபந்நியாசம் செய்யவாவது கூடாது.

61. நமது பிராரப்தத்தை நாமே புசித்துத் தீரவேண்டு மென்று எண்ண வேண்டும்.

62. பெண்களின் சகவாசத்தினின்றும் எப்போதும் விலகியிருக்க வேண்டும்.

63. ஆரம்ப ஞானம், அப்பியாச ஞானம், அனுபவ ஞானம், அகண்ட ஞானம் இவைகளை விசாரணை யில் தெளிந்து கொள்ள வேண்டும்.

64. எல்லா ஜீவராசிகளிடத்து மிருப்பது ஒரே ஆத்மா வென்றெண்ண வேண்டும்.

65. உள்ளே செல்லப்பட்ட அன்னம் இந்திரியம் பிராணன் மனம் இவைகளின் வாஸ்தவ சக்தி களைத் தகுந்த காரணமின்றி வெளியே செல்ல விடக் கூடாது.

66. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துக்களிலுமுள்ள சத்தை மட்டும் கிரகித்துக் கொண்டு அசத்தை அகற்றி விட வேண்டும்.

67. பிரஹ்ம பிந்து, அசல பிந்து, தேவ பிந்து, ஜீவ பிந்து, ரிஷி பிந்து, மனுஷ்ய பிந்து, மார்க்க பிந்து, அயோனிஜ பிந்து, ஜோதி பிந்து, அமானுஷ பிந்து, மாயா பிந்து, இப்பதினோரு பிந்துகளையும் அடை யாமல் நாத பிந்துவை அடைய முயல வேண்டும்.

68. பேதமல்லாததைப் பேதமாகவும் பேதமுள்ளதைப் போதமல்லாததாகவும் தோற்றுவிப்பது மாயாஜால மென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

69. மாயை முதல் சகல தத்துவங்களையும் பிரஹ்மத்தை நோக்கிச் செலுத்தக் கூடிய ஊர்த்வமுக ஆரூடி யோகத்தை அவலமிக்கச் செய்ய வேண்டும்.

70. எண்ணம், பார்வை, நடை, போகம், கேள்வி, ஸ்பர்சம், வசனம் இவைகளால் சில சக்திகள் நம்மை விட்டுப் புறப்படுகிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

71. பரமாத்மா ஜீவாத்மா மூலப்பிரகிருதி இம்மூவிதத் தத்துவங்களின் உண்மையான சொரூபங்களை அனுபவ விசாரணையால் அதனதன் ரகஸ்யங்களை அந்தரங்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

72. ஸ்தூல சரீரத்திலுள்ள தொண்ணூற்றாறு தத்துவங் களுக்கும் பிரகாசமாகிய ரேதஸை எந்தவிதமான காரணங்களாலும் பகிர்முகப்படுத்த விடாதபடி முது கெலும்பின் சுக்ஷூம்னா நாடி மார்க்கமாய்ப் பிரமரந்திரத்திற் சேர்ப்பிகக் கூடிய வஜ்ரசூசி என்ற யோகத்தை அப்பியாசிக்க வேண்டும்.

73. உலக ஆசையை உலகத்திலடக்கி, உலகத்தை உடலிலடக்கி, உடலைக் கருமேந்திரியத்திலடக்கி, கருமேந்திரியத்தை ஞானேந்திரியத்திலடக்கி, ஞானேந்திரியத்தைப் பிராணனிலடக்கி, பிராணனை மனத்திலடக்கி, மனத்தை விருத்தியிலடக்கி, விருத்தியை அறிவிலடக்கி, அறிவை விஞ்ஞானத் திலடக்கி, விஞ்ஞானத்தை தியானத்திலடக்கி, தியானத்தை சமாதியிடலக்கி, சமாதியை நிஷ்டையி லடக்கி, நிஷ்டையைப் பிரகிருதியிலடக்கி, பிர கிருதியைப் பிரஹ்மத்திலடக்கி, பிரஹ்ம மாத்திரமாக நிலைக்க வேண்டும்.



74. பரமதியாகிகளான ஞானாப்பியாசிகள் உருவமுள்ள எந்த தெய்வத்தையும் உபாசிக்கக் கூடாது.

75. பிறரைக் குற்றங் கற்பிக்க எழுந்த மனதைக் குற்றமென்று கண்டு அதை நீக்க முயலவேண்டும்.

76. பஞ்சேந்திரிய மயக்கங்களான சங்கீதம் பரத நாட்டியம் ஸ்பர்ச சுகம் ஜீவ சிருஷ்டி ரூபானந்தம் அறுசுவை ஆசை வாசனாத் திரவியங்கள் இவை களை அகற்றிவிட வேண்டும்.

77. உலகாசாரம் உடலாசாரம் யோகாசாரம் பந்தாசாரம் மதாசாரம் பராசாரம் அன்பாசாரம் அறிவாசாரம் அமலா சாரம் சதாசாரம் ஜீவாசாரம் மாயாசாரம் முதலிய ஆசாரங்களைத் தரிசித்து முறையே அனுபவித்தபின் ஞானாசாரம் பழக வேண்டும்.

78. பக்குவமில்லாத காலத்தில் பக்குவமில்லாத தேசத்தில் பக்குவமில்லாத இடத்தில் பக்குவ மில்லாதவர்களுக்குப் பக்குவமில்லாத ஹிருதயத் தில் பக்குவம் வாய்ந்த பரமாசாரியார் பக்குவத்தைப் போதிக்க மாட்டாரென்று தெறிந்து கொள்ள வேண்டும்.

79. ஆதி ஜெகதீஸ்வர பரமேஸ்வர சூலபாணதாரண திரிநேத்திர நித்திய சொரூப சாந்தவடிவ மஹாத் மாவாகிய மஹா கைலாஸவாச பரம யோகியினது சகுண சொருபத்தை அகற்றி நிர்க்குணப் பிரஹ்ம சொரூபமாகத் தியானித்து வரவேண்டும்.

80. ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, லக்ஷ்மிதேவி சகித சர்வலக்ஷண சர்வகுண சம்பன்ன சத்துவ சொரூப

நித்திய சூரிய பரமபாகவத சகித விரஜாநதி நிலைய ஆதிசேஷ பூஜித அனந்த கல்யாணகுண கருட தேவ வாகன பரமகாருண்ய சர்வலோக சரணயத்துவ பாஞ்சரூபவிபவ பகவத்சொரூப அப்ராகிருத வைகுண்டவாச அப்ரமேய அகண்ட ஸ்ரீ பரப்பிரஹ்ம பரவாசுதேவரது உருவத்தைப் பிரஹ்மத்தை யன்றி வேறில்லாததாகத் தியானஞ் செய்ய வேண்டும்.

81. எங்கம் நிறைந்த ஆத்மாவே நாமென்று சந்தேக விபரீதமறத் திடமாய்த் தினந்தோறும் நினைத்துவர வேண்டும்.

82. தானே தானான பிரஹ்மமாய் நிலைத்தபடியே நிற்க வேண்டும்.

ஓம் தத் ஸத்

ஓம்

தத் ஓம் ஸத்

# ஆடு துறை

## முகவுரை

அன்பர்காள் ஜகத்பிரசித்தி பெற்ற ஸ்ரீவிலக்ஷணானந்தர் ஓர்நாள் கும்பகோணத்திற்கு எழுந்தருளினார். அத்தருணம் அங்குள்ள பலர், "ஸ்வாமிகளே எங்கிருந்து வருகின்றீர்"களென்றார்கள். அதற்கு, "இதுநாள் வரையில் ஆடுதுறையில் இருந்து விட்டேன். இன்று ஆடாதுறைக்கு போகிற வழியில் இவ்வூரில் தங்க நேரிட்டது" என்று பதிலளித்தனர். இவ்வாச்சரியமான வார்த்தையைக் கேட்ட அவர்களெல்லாம், "தேவரீர் கூறிய ஆடுதுறை ஆடாத்துறை இரண்டின் அந்தரங்க அபிப்பிராயம் எங்களுக்கு சரியாக புலப்படவில்லை. ஆதலால் ஸ்வாமிகள் அருள்புரிந்து மேற்கூறிய விஷயங்களை அடியேங்கட்கு சிறு உபந்நியாச வாயிலாக திருவளர்கின்ற வாணிபிரசந்நரான தங்களது வாக்கினால் கேட்க ஆவல் கொண்டோ"மென்றனர். ஸ்வாமிகள் அவ்வாறே 60 நிமிஷ நேரம் மெதுவான சொற்களால் மதுரமான வசனங்களால் கம்பீரமான தோற்றம் நோக்கம் இவைகளால் அதி அத்புத ஞானயோக பக்தசாரகர்ம நிச்சய சம்மந்தத்துடன் உபந்யாசித்தனர்.

இங்ஙனம்,
ஓர் அன்பன்

ஓம் தத் ஸத்

# ஆடு துறை

ஆலின்கீழ் மவுனநிலை அன்றேயிருக்கும் அரனவனே
வாலிதனக்கு முக்திதர வந்ததலமாமாடுதுறை
நாலினோடு மாறேழு நாலானுடனே யானவர்கள்
மாலினுறவுமாடாத துறையைகண்டு மகிழ்வாரே.

ஆத்ம சகோதரர்களே,

இப்போது நான் இவ்விடத்தில் உங்களுக்காக அவஸ்யமாய் பேச வேண்டிய விஷயம் இன்னதுதான் என்பது இங்குள்ள எனது ஆத்ம அந்தரங்க நேயர்க்கு தெரிந்திருக்க வேண்டிய விஷயமல்லவென்று நினைக்க மாட்டேனென்று கூறவுமிடமில்லை. அப்படி நிச்சயமாக நம்பவுமிடமில்லை பின்னோ என் வடிவத்திற்கும் உங்களுடைய உண்மையான ஆத்ம வடிவத்திற்கும் அவதார பூத வடிவரான யாதொரு பரமேஸ்வரனுண்டோ அன்னவரது ஆத்ம பக்தியின் திடத்தால் இவ்விஷயத்தை நம்பி ஒருவாறு கூற ஆரம்பிக்கிறேன்.

இன்று நான் நெடும் பயண உத்தேசத்துடன் நெடு நாள்வரை தாபத்ரயங்களாலும் மனித கூட்ட ஜகத் பிராந்தி யாலும் அஞ்ஞான விஷயத்தாலும் (நெடுநாள் தெரியா மல்) ஆடுதுறையிலேயே இதுவரை காலங்கழித்து விட்டேன். இனிமேல் ஆடுதுறையைவிட்டு ஆடாத் துறைக்கு புறப்பட்டு சென்றுவிட வேண்டுமென்று எண்ணி ஆடுதுறைக்கும் ஆடாத்துறைக்கும் மத்திய ஸ்தானமாகிய கும்பகோணத்தில் தங்க நேரிட்டது. நீங்களும் வந்தது. நான் இப்போது சொல்லப்போகிற ஆடுதுறை வேறு. ஆடாத்துறை வேறு. கும்பகோணம்



வேறு. இம்மூன்றும் வேறு வேறாக அதிரகஸ்ய ஆத்ம ஞான சம்பந்தமாகவே யிருக்கும். இவ்விஷயங்கள் சூக்ஷூம சரீரத்தின் தலைவனான மனதின் விஷயமாதலா லும் அஞ்ஞான விரோத விஷயமாகவும், ஞான சாதன விவரங்களையும் ஜீவாத்மாவுக்கு புலப்பட வேண்டியதாயு மிருக்கிறபடியால் மனத்தைச் சாவதானமாக நிறுத்திக் கொண்டு கேட்பீர்களாக. இனி நான் ஆடுதுறைப் பற்றியும் அது நீங்கிய பின் வரக்கூடிய ஆடாத்துறையைப் பற்றியும் இரண்டின் உண்மையான லக்ஷணங்களைப் பற்றியும், உத்தமமான ஆடுதுறை இன்னது, உறுதியான ஆடுதுறை இன்னது, உண்மையான ஆடுதுறை இன்னது, இந்நாள் வரை இருந்த ஆடுதுறை இன்னது இன்று புறப்பட்டு வந்த ஆடுதுறை இன்னது என்பதைப்பற்றி பேசலா மென்று நினைக்கிறேன்.

அன்பர்களே அடியார்களே,

ஆடுதுறை என்பது ஆடுகிற வழி என்று அர்த்தமா கிறது. ஆடுகிற வழி எப்படி, ஏன் ஆடுகிறது, ஆட்டுகிறது யார்? யார் ஆடுகிறது? எப்போது ஆடுகிறது? எங்கே ஆடு கிறது என்ற விஷயங்களை முதலில் ஆராய்ந்து அறிய வேண்டும்.

ஜீவாத்மா சம்மத சம்பந்தமான மனது விஷயங்களில் பட்டு ஆடுதுறை பல இருக்கின்றன. இவற்றை இங்கு விவரிக்கிறேன்.

அஞ்ஞானம் ஞானம் என்று கூறப்படுகிற இந்த துறை வழியாக நாம் இறங்கி ஆடுகிறோம். இதோடு இவ் விஷயத்தை நிறுத்தி விடுவோமாயின் தெளிவாக புலப்படாதென்பதை உணர்ந்தே விவரிக்க வேண்டியது அவஸ்யமே என்று உங்கள் மதியிற்பட்டிருக்கலாம். மற்றும்

ஸ்தூல சரீரம் சூக்ஷம சரீரம், காரண சரீரம் மஹா காரண சரீரம் ஆதிகாரண சரீரம் என்று ஐந்து சரீரங்கள் நம் மிடத்தே தயாராகவிருக்கின்றன. இந்த ஐந்து சரீரங்களின் மயக்கத்தாலேயே நான் இதுவரை ஆடுதுறையில் தங்கி விட்டேன். இனி ஐந்து வகை சரீரங்களைப்பற்றிப் பேச ஆரம்பிக்கிறேன்.

ஆறுவித தாதுக்களோடு கூடியும் மாதாபிதாக்கள் சம்பந்தம் அதிஷ்ட வடிவமாயும், பிராரத்த அனுஷ்டான சம்பந்தமார்க்கமாயும் இருக்கப்பட்ட ஸ்தூல சரீரத்தினால் வரக்கூடிய ஆடுதுறை.

இருபது தத்துவங்களோடு கூடியதாயும் சர்வதா இராசத குணசலன சம்பந்தமாயும் அஞ்ஞான காரிய அனு கூலமாயுமிரானின்ற சூக்ஷும சரீரத்தினால் உண்டாகக் கூடிய ஆடுதுறை.

அவித்தை அஞ்ஞானம் மாயை பிரகிருதி அழுக்கு முதலிய பல நாமங்களுக்கு ஏதுவானதாயும் ஈஸ்வரகற்பித மானதாயும் இராநின்ற காரணசரீரத்தினால் வரப்பட்ட ஆடுதுறை.

மேற்கூறிய ஸ்தூலம் சூக்ஷமம் காரணம் என்ற இம்மூன்று சரீரத்தின் ஒற்றுமையான காலரூப மகாகாரண பிரகிருதியினால் உண்டாக்கப்படுகின்ற ஆடுதுறை.

ஸ்தூலம், சூக்ஷமம், காரணம், மகாகாரணம் என்ற நான்கையும் தாண்டி துரியத்திற்குபோகும் இடைவெளி யின் தடைரூபமான ஆதிகாரண சரீரத்தினால் அனுபவ மாய் வாராநிற்கின்ற ஆடுதுறை.

இவ்விதமாக ஆடுதுறையில் இதுகாலம் வரை பல ஆட்டத்தின் சாரமாக நாம் நின்று விட்டோமென்பது



தற்போது விளக்குவது கடினம். நமது மனது ஆடுகிற வழி எந்தெந்த காரணங்களால் உண்டாகும் என்பதைப் பற்றி கொஞ்சமாய்த்தான் பேசலாமென நினைக்கிறேன். ஏனெனில் தற்போது பெரிய மனிதர்களாகிய நமது இந்தியர்கள், ஆதி காலத்தில் பாரத நாட்டின் பெரிய மனித இந்தியர்கள் இவ்விரண்டு இந்தியர்களையும் சீர்தூக்கி பார்ப்போமானால் என் மனது இப்படியும் நமது இந்தியா போய் விட்டதே என்று பரிதாபமடைகிறது. ஆதிகாலத்தில் சுமார் ஆயிர வருடங்களுக்கு முன் விபூதி ருத்திராக்ஷம் துளசி மண் திருமண் முதலிய ஞான சாதனமான சிவ விஷ்ணுக்களின் லட்சியத்தை அணிபவர்கள் நாள்தோறும் தேவாலயம் பிரம்மாலயம் இதிற் சென்று பக்தி செய்து வருபவர்கள் பகவத்காலக்ஷேபம் செய்கிறவர்கள் பற்றை அடியோடு விட்டவர்கள் நல்ல காரியங்கள் செய்பவர்கள், பிராம்மண பூஜை பசு பூஜை, தெய்வ பூஜை, குரு பூஜை இவைகள் செய்பவர்கள் இத்தன்மை யுடையவர்களை நமது இந்தியாவில் பெரிய மனிதர்கள் என்று கூறுவது வழக்கம். தற்போது அதிக திரவியமட்டும் உள்ளவர்கள் நிரம்ப சாராயம் ஒஸ்கி பிராந்தி மாமிசம் அருந்துவோர்கள் காலில் பூட்ஸும் தலையில் விகாரமான கிராப்பும் உள்ளவர்கள் அபரிமிதமாக குடிவெறியில் பேசுபவர்கள் வரன் முறை யின்றி கண்ட ஸ்திரீகளை சேருபவர்கள், மோட்டாரில் செல்பவர்கள் கெட்ட காரியங்களை மிகுதி யாக செய்பவர்கள் முதலியவர்களை பெரிய மனிதர் களென்று கூறுகிறார்கள். இது அநியாயம். (பணக்காரர்களா யிருந்தும், பூட்ஸ் அணிந்து கொண்டிருந்தும், மோட்டா ரில் செல்பவர்களாயிருந்தும், நற்குணமுள்ளவர்களை இந்த வார்த்தை பாதிக்காது) நம்முடைய பாரத நாடு இத்தகைய மூட விஷயத்திற்கு என்ன காரணத்தினால்

வந்து விட்டதென்று தற்போது கூற வேண்டியது அவஸ்யமில்லை யென்றே நினைக்கிறேன். இவ்விஷயம் இதோடு நிற்கட்டும்.

நமக்கு ஆடுதுறை வரக்காரண மென்ன வென்று பார்ப்போமானால் முக்குண சம்பந்தமாக நாம் ஆய்விட்டதால் ஆடுதுறையிலிருக்க நேர்ந்து விட்டது. இந்த ஆடுதுறை என்பதை முற்காலத்தில் ஜாண்டில்ய மகிரிஷி வைசம்பாயனருக்கும் ஸ்ரீ ராமர் லக்ஷ்மணருக்கும் வாலி அங்கதனுக்கும் கூறி யிருப்பதாக புராணங்களில் தெரிய வருகிறது. சுமார் 6 லட்சம் வருஷங்களுக்கு முன் நமது இந்தியாவில் பிரபல அரசனாயிருந்த வாலி யென் னும் ஓர் மலைவாசமான வானர அரசன் ஆடுதுறையை விட்டு ஆடாத்துறைக்கு செல்ல வெண்ணி சிவபிரானை பூசித்து வந்ததாக தெரிகிறது. நான் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஓர் கிராமமான ஆடுதுறையைக் கூற வரவில்லை. மற்றோமனஆடுதுறை இந்திரிய ஆடுதுறை பிராணனாடு துறை அஞ்ஞான ஆடுதுறை இவ்வகையான கெட்ட ஆடு துறையிலிருந்த நான் அதைவிட்டு ஆடாதுறைக்கு போகவேண்டி புறப்பட்டு நடுவிலுள்ள இடைமருதூர் தாண்டி திருநாகேஸ்வரத்திற்குள் நுழைந்து கும்பகோணம் வந்துவிட்டேன். இவ்வார்த்தை பகிரங்கத் தில் தாற்பரிய மல்லவென்று ஆரம்பிக்கலாம். ஆடுதுறை யான சலன வடிவ உலகத்தை அதாவது அதனாசையை விட்டு ஆடாத்துறையான பரமபதவடிவ முக்தியை அடைய வேண்டி அவாக்கொண்டு ஆடுதுறையைவிட்டு புறப்பட்டேன். இடையில் இடைமருதூர் வந்ததுஎன்றால் இடைஎன்பது மத்தியம் (நடு என்பது தாற்பரியம்) மரு என்பது - குற்றம் ஊர் என்பது - குற்றமும் நடுவுமின்றிய ஓர் இடம். அதாவது சுகதுக்கத்திற்கும் இடை, லாபநட்டத்



துக்கும் இடை, நன்மை தீமைக்கும், ஜட அஜடத்துக்கும் இடை, சத்த சத்துக்கும் இடை, வந்ததற்கும் போனதற்கும் இடை, இரண்டு சங்கற்பங்களுக்கும் இடை, பாப புண்ணியங்களுக்கும் இடை இத்தகைய இடையிலுண் டான இடைமருதூர் வந்து தங்கி அதனப்பால் திருநாகேஸ்வரம் வந்தேன் என்பது அழகான நாகமாகிய மூலாதார சக்தியான குண்டலி என்னும் நாகஈஸ்வர நாட்ட தரிசனமானதாகும். அதைவிட்டு கும்பகோண மென்றால் மூன்று கோணமுடையதும் கும்பம் போன் றுள்ளதுமான மூலாதார கணேச தரிசன கும்பகோணம் வந்திறங்கினேன். இனி கும்பகோணமான மூலாதார வாச சக்தியால் இங்கு நின்று ஆடாதுறையான துரியாதீத நகரம் செல்ல வேண்டும். அதற்கு இடையில் இரண்டு ஆறுகளிருக்கின்றன. அவை அக்கினியாறு ஒன்று சூன்ய நதி ஒன்று ஆகும். அதைத்தாண்டி அப்பால் மாயையாகிய திட்டே வருகிறது. அதையும் தாண்டினால் அப்புறம் திவ்ய வடிவ ஈஸ்வரனது காற்று உண்டாகிறது. அதனப்பால் செல்ல செல்ல மனதின் ஆனந்தமற்று பிரம்மானந்தம் உதயமாகி ஆடாத்துறைக்கு கொண்டு போய்விடுகிறது.

சபையோர்களே, ஆடுதுறை என்பதை இதுவரை கூறிவந்ததை இன்னும் விவரிக்க எனக்கு இஷ்டமில்லை ஏனெனில் தற்போது உள்ள நமது இந்தியர்கள் உலக லௌகீக மார்க்கத்தில் திரும்பி அதே நாட்டமாகி மேல் நாட்டாரது மூடநாகரீகத்துடன் கலந்து விட்டபடியால் அதை விரிவாக கூறினால் கவனிக்க மாட்டார்களென்றே பதினைந்து நிமிஷத்திற்குள் படித்து முடிகிற புஸ்தக மாகவே இருக்க வேண்டி சுருக்கி கூறினேன். உலகம் முதல் அஞ்ஞானம் வரை கலந்து ஆடுதுறையில் தங்கி அதைவிட்டு இடை மருதூர் நாகேஸ்வரம் சென்று

மூலாதார குண்டிவாச கும்பகோணத்திலிரங்கி அப்பால் அக்கினி சூனியம் முதலிய ஆறுகள்தாண்டி தடையான திட்டே விட்டு அதிரகஸ்யமான நமது ஆதிகால மகான் களான வசிஷ்டர், பிருகு, மரீசி, அத்திரி, மாண்டவ்யர், ஜாண்டில்யர், சுகர், வியாசர், பராசர், சக்திமுனி, அகஸ்தியர், முதலிய பிரம்மரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்ட ஆடாத்துறைக்கு போக வேண்டும்.

இனி நேரே ஆடாத் துறைக்கு போக வேண்டிய மார்க்கத்தைக் கூற ஆரம்பிக்கிறேன்.

அபாரமான பற்பல அதியற்புதமான யோகங்களாலும் பக்தி யோகத்தினாலும் கரும யோகத்தினாலும் கருமயோக சம்பந்த சாஸ்திரத்தினாலும் ஆடாத்துறைக்கு போய் விடலாம். பிராணனை அடக்குகிற ஹடயோகம் மனதை யடக்குகிற இராஜயோகம் மனது பிராணன் இரண்டும் சேர்த்து அடக்குகிற சிவராஜயோகம் இந்திரியங்களை அடக்குகிற ஜம்பூடக யோகம் மனிதர்களால் கண்டு பிடிக்க முடியாத அதிமானுஷ யோகம் மற்றும் அமானுஷ யோகம் கஜமார்த்தனியோகம் ஹம்ஹாம்ஸ யோகம் இராஜராஜேஸ்வரி யோகம் சிவஇராஜாங்க யோகம் பரமாகண்டல யோகம் பராத்பர யோகம் முதலிய யோகங்கள் அறுபத்தினாங்கு இருக்கின்றன (அவற்றை இங்குகூற சாவகாசமில்லாதபடியால் யோகங்களின் பெயர் களை மாத்திரம் கூற வேண்டியதாயிற்று) இந்த யோகத் தில் பரமகாண்டல யோகத்தை மட்டும் அதி சுருக்கமாக கூற ஆரம்பிக்கிறேன்.

ஆரம்பத்திலேயே ஈஸ்வர சிருஷ்டி வடிவ இயற்கை யாகாரமான பால் கனி காய் கோதுமை முதலிய சத்துவ மான ஆகாரங்களால் பசிதீர்த்து பாகிய ஆந்தர ஏகாந்த



ஆசாரபுனிதாராய் இந்திரியங்களை அடக்கி ஜம்பூடத்திலே பற்றை விட்டு பிராணனை மனதிலடக்கி நிலைமையில் நிற்கச் செய்து தனிமையான மலை குகை சமுத்திரக்கரை புண்ணிய க்ஷேத்திரங்கள் இவ்விடத்திற்றங்கி மனதை ஆடாது ஆக்கி சர்வபற்றையும் விட்ட நல்தீரமனத்துடன் ஆறாதார சோடசகலா மார்க்கமாகச் சுழுமுனையிலேறி நின்று எழுபத்திரெண்டு பெரிய நாடிகளை வசப்படுத்தி 1008 வாசஸ்தல மூலமான சக்தியைக் கண்டு சொரூப நாட்டத்துடன் பிடரி வழியாக பிரம்மரந்திரம் ஏறி ஏகாந்த மண்டபத்தில் சென்று அசையாமல் அதைவிட்டு கீழே இறங்காதிருப்பதே பரமாகண்டல யோகமா மென்னலாம். இந்த யோகத்தினாலும் மற்றுமுள்ள பல யோகங்களாலும் ஆடாத் துறையை அடையலாம். பிரமேயபக்தி யோகத்தின் அப்பியாசத்தினால் ஆடாத்துறையை அடையலாம் இன்னும் இவ்விஷயத்தைப் பற்றி எழுதிக் கொண்டே போனால் பெரிய புஸ்தகமாய் விடும். ஆடுதுறை ஆடாத் துறை என்ற விஷயத்தைப்பற்றி என் மனதிலுதித்த நூறு மடங்கு நினைப்பில் 99 பங்கு நினைப்பை நிறுத்தி ஒரு பங்கு நினைப்பை நாவினில் வரச் செய்து பேசினேன் இதற்கு மேல் இந்தவிஷயத்தைப்பற்றி பேச வேண்டிய அவரவுங்களுக்கு இருக்க வேண்டிய தவசியமேயாகும் ஆனால் இப்போது நேரே ஆடாத் துறைக்கு நான் போகிற பயணமாகிறபடியால் இப்படியே பேசப் பேச முடியாமல் போய்க் கொண்டிருக்கும். ஆதலால் இதோடு இவ் விஷயத்தை முடித்து விடப்பட்டிருக்கிறது.

ஓம் தத் ஸத்

# பரமாத்ம பக்தி

இரண்டாவது பரமாத்ம பக்தி என்பதைப்பற்றிப் பேசுவதற்கு முன் பரமாத்ம லக்ஷணத்தைப்பற்றிக் கூறுவது பொருத்தமாயிருக்குமென்று உங்களுக்கு தெரியுமல்லவா. வாக்கு மனம் பிராணன் இந்தரியங்கள் இவைகளால் கோசரிக்கப்படாததும் ஒன்றிலும் தாக்கற றிருப்பதும் சகல ஜீவாத்மாக்களுக்குள்ளும் அந்தரியாமி யாயிருப்பதும் சர்வாதீத சுபாவமு முடையதாகியது பரமாத்மா.

அவ்வஸ்துவை அவித்தையின் வசப்பட்டிருக்கிற நம்மைப் போன்ற ஜீவாத்மாக்கள் எவ்வாறு அறிந்து பக்தி செய்ய முடியும்? வேதங்களில் அவாங்மனோவகோசரம் என்று கூறப்படுகின்ற பெரிய வஸ்து நிர்க்குணமல்லவா? அதையடைவதும் பக்தி செய்வதும் பிராகிருத ஜீவர் களுக்கு முடியாததல்லவா? ஆனால், பக்தி செய்யாமல் விட்டுவிடுவதா? நம்மால் முடியாத காரியமொன்றுண்டா? முடியாது விட்டு விட்டால் நாமேன் இந்த மனித சரீரத்தோடு மஹரிஷிகள் அவதரித்த புண்ணிய நாட்டில் பிறந்திருக்க வேண்டும். நம்மால் முடியாதென்கிற அபாவ ஞானத்தை இந்த நிமிஷத்திலிருந்து அடியோடு உதறித் தள்ளிவிட்டுக் கெம்பீரமான சிங்கக் குட்டியைப் போலிருங்கள், கீழ்த்தரமான நரி ஓநாய் செந்நாய் முதலிய மிருகங்களின் அல்பத் தன்மையையும் மத்தியதர மிருக மாகிய வியாக்கிரம் கரடி முதலியவைகளின் கொடுமை களையும் விட்டொழித்து உயர்ந்த உத்கிருஷ்ட மிருக மாகிய சிம்ஹத்தின் கெம்பீரமான தன்மையை யடைய வேண்டும். வஞ்சகமில்லாமல் நம்மால் முடிகிறவரை



பரமாத்ம பக்தி செய்தே தீரவேண்டும். வேதப் பிரமாணத் தாலும் யுக்தியாலும் பரமாத்மாவை அறிந்து கொள்வது பரோக்ஷ ஞானம், அனுபத்திலறிந்து கொள்வது அபரோக்ஷ ஞானம். பரோக்ஷஞானம் பாவனை, அபரோக்ஷ ஞானம் அபாவனை. ஆனால் இவைகளின் உட்கருத்துக்களையும் உண்மைகளையும் குரு முகமாகத் தெரிந்து கொள்வது தான் விசேஷம். உபநிஷத்துக்களில் பரமாத்ம பக்தியை நிர்க்குணோபாஸ்தி யென்றும் சகுணோபாஸ்தியென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சரீர அபிமானமுள்ள வன் சகுணோபாஸ்தியையும் சரீர அபிமானத்தை யொழித்தவன் நிர்க்குணோபாஸ்தியையும் அப்யாசிப்ப தற்கு அதிகாரியாகிறான். சத்துவகுண சம்ஸ்காரம் அதிகமா யிருக்கப்பட்டவர்கள்தான் நிர்குணோபாசனையில் நிலைத்திருக்க முடியும். சத்துவ குணம் குறைவுபட்டு ரஜோகுணம் தமோகுணங்கள் அதிகப்பட்டு அவ்வாறே யிருந்தால் நிர்க்குணோபாஸ்தியில் மனம் நிலைத்திருக்க மாட்டாது. சகுணோபாஸ்தியில் கூடக் கஷ்டப்பட்டு நிலைபெறச் செய்ய வேண்டியிருக்கும். இதற்கெல்லாம் பல ஜென்மாந்தர சுப அசுப வாசனைகளே காரணமென்று தெரிகிறது. நிர்க்குணம் சகுணம் என்ற இரண்டின் உபாஸ்தி செய்வதற்கு முன்னால் விக்கிரஹ ஆராதனை செய்து வந்தால் பின்னால் அனுகூலமாயிருக்கும். விக்கிரஹ ஆராதனையை ஏககாலத்தில் சிறிது முன்பின்னாக உள்ளிலும் வெளியிலும் அனுஷ்டித்தால் மிகவும் நல்லது. வெளியில் ஓர் விக்ரஹத்தை ஸ்தாபிதம் செய்து பூஜை நைவேத்தியம் ஜெபம் பாராயணம் தூபம் தீபம் உபசாரம் முதலியவைகளைச் செய்வதுபோலவே, இந்திரியங்களையும் மனதையும் ஒருமுகப்படுத்தி பிரஹ்மரந்திரம், சுழுமுனை, கண்டஸ்தானம், ஹிருதயம்,

**நாபிஸ்தானம்** இவ்வைந்து இடங்களில் ஏதாகிலும் ஒன்றில் விக்கிரஹத்தை மனத்தால் பாவனை செய்து வெளியில் செய்த ஆராதனை முறைப்படியே உள்ளிலும் செய்து வந்தால் சீக்கிரம் பரமாத்மாவையடைவதில் யாதொரு தடையும் இருக்க மாட்டாது. விக்ரஹ ஆராதனையைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறினும் நாம் அதை லட்சியம் செய்ய வேண்டியதில்லை. விக்ரஹத்திற்கும் பரமாத்மா வுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி மற்றொரு முறை உபந்நியாசம் செய்யும்போது தெளிவாகக் கூறலாமென்று நினைக்கிறேன்.

சுமார் 800 வருஷங்களுக்கு முன் பூவிருந்தவல்லி என்ற க்ஷேத்திரத்தில் அவதாரம் செய்தருளிய திருக்கச்சி நம்பி என்றவர் ஆரம்பத்தில் விக்ரஹ ஆராதனை செய்து அதனால் பராமாத்ம பக்தி முதிர்ச்சி பெற்றுக் காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமானிடம் கைங்கரியம் செய்யவும் அவருடன் நேரில் பேசவும் உள்ள பெரிய பாக்கியத்தை அடைந்தார். அத்துடனில்லாமல் ஸ்ரீ இராமனுஜாசாரியார், கூரத்தாழ்வார் என்ற இருவர்களையும் வரதராஜனிடத்தில் சிபார்சு செய்து பகவத் கைங்கரியத்திலீடுபடும்படிச் செய்திருக்கிறார். இன்னும் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்ப நாட்டாழ்வார் இராமாயணம் பூர்த்தியாக்கி ஸ்ரீரங்க க்ஷேத்தி ரம் சென்று சிலா ரூபமாகிவிருந்த மோட்டழசிங்கர் முன்னிலையில் அரங்கேற்றும் போது "சபாஷ்" யென்று கர்ஜித்து சிரசை அசைத்திருக்கிறது. பின்னும், திருவரங்க நாதர் முன்னிலையில் அரங்கேற்றும்போது கம்பரை நோக்கி, "இத்தனை செய்யுள்களைப் பாடியநீர் நம் சடகோபனைப் பாடினீரோ" என்று தமது திருவாய் மலர்ந்த ருளியிருக்கிறார். இதைத்தவிர, இரண்டாயிரம் வருஷங்



களுக்கு முன் சோழ தேசத்தில் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள திருநாரையூர் என்ற க்ஷேத்திரத்தில் ஆதிசைவப் பிரம்மண குலத்தில் **நம்பியாண்டார் நம்பி** என்ற சிறுபாலகன் கணேஸ்வர விக்ரஹத்திற்குத் திருவாராதனஞ் செய்து அந்த விக்ரஹத்துடன் சம்பாஷித்துப் பூஜை அன்னத்தை வாயைத் திறந்து சாப்பிடும்படி செய்திருக்கிறார். காளாஸ்திரி க்ஷேத்திரத் தில் **கண்ணப்பன்** என்கிற பக்தன் தனது கண்ணைத் தோண்டிச் சிவலிங்கத்தின்மீது வைக்கும்போது அவ்விலிங்கத்துள்ளிருந்து சப்தத்துடன் ஓர் கையும் புறப்பட்டு இவனை அனுக்கிரகித்திருக்கிறது. விக்ரஹ ஆராதனையின் பூரண பலத்தால், பரமாத்மாவையடைந்து ஜீவன் முக்தித் தன்மையைப் பெற்றவர்கள் அளவிறந்த பேர்களிருக்கிறார்கள் கடைசியாக நமது பாரத கண்டத்தின் வங்காள நாட்டில் **இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்** என்ற மஹான் ஜெகன்மாதாவாகிய **ஸ்ரீ காளிகாதேவியின்** விக்ரஹத்திற்குப் பூஜை செய்து அதன் மூலமாகவல்லவா உலகம் போற்றும் உத்தமராகவும் ஜீவன் முக்தராகவும் ஆயிருக்கிறார். சாளக்கிராம பூஜை திருத்துழாய்த் தீர்த்தப் ப்ரசாதம் ருத்திராக்ஷம் துளசி மணி விபூதி திருமண் அணிதல் புண்ணிய தீர்த்த ஸ்நானம் இவைகளால் காரியசித்தி நாடி சுத்தி சரீர ஆரோக்கியம் சித்த சுத்தி முதலியவைகளேற்படுகின்றன. இதனாலேயே நமது முன்னவர்களான மஹரிஷிகள் அவஸ்யமாக இவற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பரமாத்மாவை அடைவதற்கு முக்கிய சாதனமான சத்துவ குண ஆகாரம், தைரியம், நடை, வார்த்தை, எண்ணம் பழக்கம் இவற்றை அனுஷ்டித்து வருவது மிகவும் நல்லது. இவைகளெல்லா வற்றிலும் ஆகார பரிசுத்தமே சிரேஷ்டமானது. அதுவும்

மற்றொருவர் திருஷ்டியின்றி ஏகாந்தமாகச் சாப்பிடுவது
மிகவும் விசேஷம். நமக்குப் பொருத்தமான சத்துவ குண
ஆகாரத்தை உண்ணும்போது பாபிகளின் திருஷ்டி
பட்டால் மனதிற்குப் பாபசங்கல்பங்களும் உடம்பிற்கு
நோயும் சம்பவிக்கின்றது. இந்தக் காரணங்களைக்
கொண்டே அவரவர்கள் தனித்தனியாகப் புசிப்பது
பரமாத்ம பக்திக்குச் சாதனமென்று விசிஷ்டாத்வைத
ஸ்தாபனராகிய **ஸ்ரீ இராமானுஜாசாரியார்** சொல்லியிருக்
கிறார். இதுபற்றியே, **பிரஹஸ்பதி** பகவான் ஸ்வர்க்கத்தில்
பெரிய யாகம் ஒன்று நடக்கும்போது **மஹாதேவர்** மத்தியில்
வீற்றிருக்கத் தேவர்களுக்கு உபந்நியாஸம் செய்திருக்
கிறார்.

சுத்த சத்துவகுணத்தை யடைந்தாலல்லது
பரமாத்மாவை யடைவதென்பது முடியாத விஷயமாகும்.
**மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை** இந்த நான்கு
தெய்வீக குணங்களையும் சம்பூர்ணமாகப் பெற்றாலன்றி
வாஸ்தவத்தில் பரமாத்ம பக்தியை அடைய முடியாது,
தினந்தோறும் தீவிரமான புத்தியுடன் மனதை ஏகாக்கிரப்
படுத்திக் கொண்டு மோக்ஷயிச்சையோடு விக்ரஹ
ஆராதனம் சகுணத் தியானம் நிர்க்குணோபாசனை இவை
களை அனுஷ்டித்து வரவேண்டும். அவ்வாறு செய்து
வந்தால் அந்தக்கரணத்தின் வாசனையின் சக்தி
களொழித்து சித்த சுத்தியாய் அதனால் எதார்த்த ஞானம்
லப்தமாகிப் பிரஹ்மசாக்ஷாத்காரத்தைப் பெற்று இனிப்
பிறவாத ஜீவன் முக்தியை அடைவதில் யாதொரு
சந்தேகமுமில்லை. பிரம்மசரிய கிருஹஸ்த வானப்பிரஸ்த
சந்நியாஸமென்கின்ற, நான்கு ஆஸ்ரமிகளாலும்
பிராம்மண க்ஷத்திரிய வைஸ்ய சூத்திரரென்கிற நான்கு
வருணஸ்தர்களாலும் பக்ஷபாதமின்றி எல்லோரும்



பரமாத்மாவையடைவதில் யாதொரு தடையுமில்லை
யென்று நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

கிரஹஸ்தாஸ்ரமிக்கும் சந்நியாசிக்கும் பரமாத்ம பக்தி
தோன்றி ஞானோதயம் வந்து விட்டால் இருவர்களுக்கு
முள்ள பரமாத்ம சுகத்திலும் வித்தியாஸமிருக்கிறது. கால்
நடையாக நடந்துக் கொண்டே வழிப்பிரயாணத்தில்
தூங்கிக் கொண்டு செல்லப்பட்டவனுக்குள்ள நித்திரை
சுகம் எவ்வாறிருக்குமோ அவ்வாறே கிரஹஸ்தாஸ்ரம
ஞானிக்கு ஏற்படுகிறது. ஏழாவது உப்பரிகையில் சப்பர
மஞ்சக் கட்டிலில் ஹம்ஸதூளிகா மஞ்சத்தின்மீது
தனிமையாய்த் தூங்கப்பட்டவனுக்குள்ள நித்திரையின்
சுகம்போல சந்நியாஸ ஞானிக்கு ஏற்படுகிறது.

முன் ஜன்மாந்திர பூர்வ புண்ணிய சம்ஸ்காரத்தால்
கெர்ப்பத்திலேயே மோக்ஷயிச்சையும் தெய்வீக ஞாபகமு
முடைய ஜீவாத்மாகவே, உத்தமமான பரமாத்ம பக்திக்கு
அதிகாரியென்று தெரிந்து கொள்ளுங்கள். மாதாவின்
கெர்ப்பத்தை விட்டு பூலோகத்திற் சம்பந்தப்பட்டபின்
புதிதாக மோக்ஷ இச்சையும் தெய்வீக ஞாபகமு முண்டாகு
மானால் அதை அவ்வளவு உத்கிருஷ்டமாக முன்னோர்
களும் சாஸ்திரங்களும் சொல்லவில்லை. நிரம்ப சாஸ்திரங்
களைக் கற்றுப் பண்டிதர்களென்று பெயரெடுத்துக்
கொண்டவர்களுங்கூடக் காமிய இச்சையால் ஸ்வர்க்கம்
பிரம்மலோகம் முதலிய அனித்திய இடங்களில் ஆசை
வைத்திருக்கிறார்கள். அவற்றை விசாரணை செய்து
பார்ப்போமானால் **இந்த பூலோகத்திலிருப்பதைவிட வேறு
லோகங்களில் ஆச்சரியப்படத்தக்க விஷயங்களொன்று
மில்லை.** ஸ்வர்க்கம் பிரம்மலோகம் இவைகள் இந்த
லோகம்போல் அழிந்து போகக் கூடியதுதான். அங்கும்

மனைவி மக்களுண்டு; ஏழை பணக்காரர்கள், ரோகம், சத்ரு, மரணம், ஜனனம், சுகம், துக்கம் இவைகளிருக் கின்றன. வாஸ்தவமான புத்திசாலிகள் இந்த லோகங்களி லிச்சை வைக்க மாட்டார்கள். அனித்திய லோகங்களிலும் பதார்த்தங்களிலும் ஆசையொழிந்த காலத்திலும் குறைவுபட்ட காலத்திலும் சித்த சுத்தி வந்து விட்ட தென்று நினைத்துக் கொள்ளுங்கள். நாம் பகவானது ஆலயங்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்யும் போதும் மஹாத்மாக்கள் ஆசாரியர்கள் இவர்களைச் சேவை செய்யும்போதும் காமிய எண்ணங்களை விட்டொழித்து எப்போதுமழியாத மோக்ஷ இச்சையுடன் செல்ல வேண்டும். நாம் மற்றொரு ஜீவனுக்கு உபகாரம் செய்யும் போதும் அதிதிகளுக்கு அன்னமிடும்போதும் பிச்சைக் காரர்களுக்குப் பிச்சையிடும்போதும் நாம் செய்கிறோ மென்ற எண்ணத்தை விட்டொழித்தும் நம்முடைய தென்கிற அகங்காரத்தை நீக்கியும் யாதொரு பிரதி பிரயோஜனத்தையும் விரும்பாமல் செய்து வரவேண்டும்.

ஸ்ரீ இராமானுஜாசாரியரென்கிற பாஷ்யகாரரிடம் ஓர் வைஷ்ணப்பிராம்மணன் சிஷ்யனாகிச் சில வருஷங் களாகப் பயபக்தியுடன் சிஷ்ருஷை செய்து வந்தான். பின் ஓர் நாள் உடையவர் சிஷ்யனை நோக்கி, "நீ, இத்தனை காலமாகப் பயபக்தியுடன் சிஷ்ருஷை செய்து வருகிறா யல்லவா, அவற்றிற்கு நான் மெச்சினேன். உனக்கென்ன வேண்டும் கேட்டுக் கொள்"றென்றனர். அதற்குச் சிஷ்யன் ஆசாரியரை நோக்கி, "நான் வேறொன்றுக்கும் ஆசைப் பட்டு இங்கு வரவில்லை. தாங்கள் பெரிய மஹானாகை யால் உங்களுக்கு எல்லாம் தெரியுமென்று எனக்குத் தெரிகிறபடியால் தாங்களெனக்கு ஸவாதம் அதாவது, வாதவித்தை குறிப்பிட்ட லோகங்களை ஸ்வர்ணமய



மாக்கி விடுவது, அதை அடியேனுக்கு உபதேசித்தருளல் வேண்டும்'' என வேண்டிக் கொண்டான். அதற்கு எதிராஜர் இவனது அறியாமையை நோக்கி உள்ளே வருத்தத்துடன் வெளியில் புன்முருவல் பூத்துக் கொண்டு, "ஹே ! உத்தம சிஷ்யா ! இஃதென்ன பெரிய காரியம். என்னுடைய ஸ்தூல சரீரத்தின் அழுக்கைத் திரட்டி மிளகுப் பிரமாணமான ஓர் மாத்திரையாக்க கொடுக்கிறேன். அதை உள்ளங் கையில் வைத்து மூடிக் கொண்டு கொஞ்ச தூரஞ் சென்ற ஒருவரையும் திரும்பிப் பாராமல் ஒருவருடனும் பேசாமல் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விட்டால் நீ எண்ணிய காரியம் பூர்த்தியாகும் " என்று திருவாய் மலர்ந்தருளினார். அதற்குச் சிஷ்யன் ஒப்புக் கொண்டு மாத்திரையை உள்ளங்கையில் வாங்கி மூடிக் கொண்டு நாலைந்தடி தூரஞ் சென்றவுடன் கைதாங்க முடியாத கனமுண்டா யிற்று. அப்புறம் சிறிது தூரம் சென்றவுடன் ஒரு பாரம் கனமுண்டாயிற்று. அப்பால் சிறிது தூரம் சென்றவுடன் கனம் தாங்க முடியாமல் கீழே வைத்து விட்டான். தன்னால் கூடிய மட்டும் அசைத்துப் பார்த்தார். அசைக்க முடியவில்லை. பல மனிதர்களையும் அழைத்து அவற்றின் விவரம் சொல்லி எல்லோருடைய பலத்தையுங் கொண்டு தூக்கிப் பார்த்தான். முடியவில்லை. இத் தருணத்தில் இராமானுஜர் அவ்விடம் சென்று நடந்த வரலாற்றை தெரிந்துக் கொண்டு சிஷ்யனை நோக்கி, "இன்னுமா மாத்திரையை விழுங்காமலிருக்கிறாய். உன் காரியம் பூர்த்தியாக வேண்டாமா?" என்று கேட்டதற்கு, "ஸ்வாமி! என்னை உயிரோடு விட்டுவிட்டால் போதும். தங்கம் செய்யும் வித்தை தெரிந்துக் கொள்ள வேண்டிய தில்லை. இந்த மாத்திரையை அப்போதே உண்டிருப்பே

னேயானால் இதற்குள் இறந்து போயிருப்பேன்" என்று கூறிய சிஷ்யனைப் பார்த்துச் சமீபத்தில் அழைத்து வேண்டிய புத்திமதிகள் கூறி **நித்யா நித்திய வஸ்து விவேக ரகஸ்யம்** போதித்துக் காமிய ஆசைகள் ஒழியும்படி செய்த துவைதாத்துவைத வர்ஜிதமான சமத்துவ பரமாத்ம பக்தியில் ஈடுபடும்படி செய்தனர். பார்க்கக் கூடிய சகல வஸ்துக்களும் பரமாத்மாவாக அனுபவத்தில் தெரிய வேண்டுமானால் முதலில் யுக்தி மூலமாகத் தெரிந்து கொள்வது அவஸ்யமல்லவா? சுருதியைக் காட்டிலும் யுக்தி சிரேஷ்டமென்று தெரிந்து கொள்ளுங்கள். இப்போது எதிரிலுள்ள மாம்பழத்தை பரமாத்மாவாக பாவிக்க வேண்டுமானால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பார்க்கும் போது மாம்பழம் மாமரத்திலும் மாமரம் பூமியிலும் பூமி ஜலத்திலும் ஜலம் அக்கினியிலும் அக்னி வாயுவிலும் வாயு ஆகாசத்திலும் ஆகாசம் சூக்ஷும வாசனையிலும் சூக்ஷும வாசனை சலன சக்தியிலும் சலன சக்தி தமோ குணத்திலும் தமோ குணம் ரஜோ குணத்திலும் ரஜோ குணம் சத்துவ குணத்திலும் சத்துவ குணம் பிரகிருதி யிலும் பிரகிருதி மூலப் பிரகிருதியிலும் மூலப் பிரகிருதி பரமாத்மாவிலும் செல்லுகின்றதல்லவா? அதனால் மாம்பழத்தை பரமாத்மாவென்று ஏன் சொல்லக் கூடாது? இப்படியே சகல வஸ்துக்களையும் ஆராய்ச்சி செய்து பார்த்தால் பரமாத்மாவாகத்தானே முடியும். இதிலென்ன சந்தேகமிருக்கிறது. முன் கூறியபடி சகலமும் பரமாத்மா வாக யுக்தியினால் பார்த்து வந்தால் பின்னால் அபரோக்ஷ ஞானம் வாய்த்து அதனால் எங்கும் பரமாத்மாவாக அறிவ தற்கு யாதொரு தடையிமிருக்க மாட்டாது. அவ்வாறே நீங்கள் அப்பியாசம் பண்ணி யுக்தியினால் முதலில் பரமாத்மாவாகப் பாவனை செய்து வந்தால் எவரிடத்திலும்



உங்களுக்கு ராகத்துவேஷமுண்டாகக் காரணமில்லை. இராகத்துவேஷம் எவனிடத்தி லில்லையோ அவனிடத் தில் பகவானது கிருபை சீக்கிரம் உண்டாகிறதென்பதைப் பிரத்யக்ஷப் பிரமாணமாகப் பார்க்கிறோமல்லவா? விருப்பு வெறுப்பு இரண்டு மில்லாதவர்களிடம் அபமிருத்யு தோஷம் நவக்கிரக பயம் மற்ற எந்தத் தீமைகளும் சமீபத் திலும் அணுகுவதில்லை. நாம் அனுஷ்டிக்க கூடிய எந்த வித மார்க்கங்களும் அனாதி காலந்தொட்டு இதுவரையில் அழியாமல் வந்து கொண்டிருக்கிற சனாதன தரும முறைப் படியும் மஹரிஷிகளின் மார்க்கப்படியும் ஸ்வானுபூதிக்கு விரோதமின்றியுமிருத்தல் வேண்டும். காலங்களுக்கேற்ற வாறு கெட்டபாஷாண்ட மதங்களும் தரும விரோதமான செய்கைகளும் பிராபல்யப்படுவதைக் கண்டு நீங்கள் கலக்கமடைந்துவிட வேண்டாம். சமுத்திரமானது அதிலிருந்துண்டாகிற அலைகள் நுரைகள் குமிழிகள் திவலைகள் இவைகள் எத்தனை பெரியதாயிருந்தாலும் சமுத்திரம் பயப்படுவதுண்டா? அவ்வாறு பயப்படக் காரணமேயில்லை. எப்போதும் அழியாத தருமமம் ஒரு காலத்தில் அழிவு பெறுவது உண்டா? கடைசியாக நீங்க ளடைய கூடிய மார்க்கத்தின் சக்தி உங்களிடத்திலேயே அமைந்திருக்கின்றது. அடைய வேண்டிய மார்க்கத்தைப் பற்றி மட்டுந்தான் நான் கூறமுடியும். ஆதலால் யாதொரு சந்தேகமு மின்றி இதுவரை பேசி யிருக்கக் கூடிய சநாதன தருமம் பரமாத்ம பக்தி என்ற மகத்தான மார்க்கத்தை யடைந்து நித்திய மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைவீர் களென்றும் அதற்கு அனுக்கிரகம் செய்ய வேண்டுமென் றும் சர்வேஸ்வரனைப் பிரார்த்திக் கொண்டு இன்று பேச வேண்டிய உபந்நியாஸத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

**- ஸ்ரீ விலக்ஷணானந்தர்**

ஓம்

தத் ஸத்

தேவார நகரம் சுத்தாத்வைதி அருட்கவி

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளால் அருளிச் செய்த

# ஞானி தரிசன லக்ஷணம்

(திருக்கழுக்குன்றம்)

1. முதலாவது - ஞானிகளிடஞ் செல்ல வேண்டு மானால் சிறு குழந்தைகளிடஞ் செல்வதுபோல, பால், இனிமையான பழ வர்க்கங்கள், மதுரமான பலகார வகைகள், கற்கண்டு, திராக்ஷை முதலிய இரம்மிய கரமான பதார்த்தங்கள் கொண்டு போக வேண்டும்.
2. மேற்கூறிய சாமான்களைக் கொண்டு செல்லும் போது அந்த ஞானியின் ஞாபகமாகவே இருக்க வேண்டும்.
3. ஞானிகளிடஞ் சென்றவுடன், கையில் மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், பாதிரி, புன்னை, குருக்கத்தி, பாரிஜாதம் முதலிய இன்னும் பலவித மான பத்திர புஷ்பங்களையும் எடுத்து அவரது பாதாரவிந்தங்களில் மனம், வாக்கு, சரீரம் என்னும் மூவிதக்கரண சுத்தியுடன் அர்ச்சித்து மூன்றுதரம் வலம் வந்து அதிஜாக்ரதையுடன் தன்னைத் தாழ்ந்தவனாக நினைத்து, இரு பாதம், இரு கை, இரு புஜம், மார்பு, நெற்றி முதலான எட்டு அங்கங் களும் பூமியிற்படியத் தண்டாகாரமாக மும்முறை நமஸ்கரிக்க வேண்டும்.



4. நமஸ்கரிக்கும்போது ஈஸ்வர நாமோச் சாரணஞ் செய்ய வேண்டும்.
5. நமஸ்கரித்துவிட்டு எழுந்து நின்று இருகைகளையும் மார்புக்கு நேராகக் கூப்பிக் கொண்டே நிற்க வேண்டும்.
6. ஞானி உத்தரவின்றி உட்காருதல் கூடாது.
7. ஞானியின் முன்பாக பலவிதமான யோக ஆசனங்கள் போட்டுட்காரலாகாது.
8. ஞானி உத்தரவின்றிப் பேசலாகாது.
9. உட்காரச் சொல்லியும் பேசச் சொல்லியும் உட்காரமலும் பேசாமலும் இருக்கலாகாது.
10. உட்காரும்போது சன்னிதானத்திடனிடத்தில் மஹா பயபக்தியுடன் சிரத்தையுடன் விரைதலும் வெகுளலுமின்றி மனமுக மலர்ச்சியுடன் பகவத் ஜபஞ் செய்திருக்க வேண்டும்.
11. ஞானிகளிடம் ஏதாவது பேசவேண்டுமானால் சமயம் பார்த்துப் பேச வேண்டும்.
12. ஞானிகளின் முன்பு வஸ்திரத்தைத் தாராளமாகத் தோளிற் போட்டுக் கொண்டு போகலாகாது.
13. ஞானிகளிடம் பேசும்போது ஏதாவது விருதாவான வார்த்தைகள் வந்துவிடுமோ வென்று பயந்து பேச வேண்டும்.
14. நம்முடைய யோசனைகளை ஞானிகளிடங் கூறலாகாது.

15. ஞானிகள் ஏதாவது கேட்டால் கேட்டதற்கு மாத்திரம் பதில் சொல்ல வேண்டும்.

16. ஞானிகளின் முன் படுத்து நித்திரை செய்தல் கூடாது.

17. உட்கார்ந்து கொண்டும் நித்திரை கொள்ளலாகாது.

18. ஆசனம் போட்டுட்காரலாகாது.

19. பாதரக்ஷை போட்டுக் கொண்டு வரலாகாது.

20. கம்பு பிடித்துக் கொண்டு வரலாகாது.

21. குடைபிடித்துக் கொண்டு வரலாகாது.

22. ஞானிகளிடஞ் செல்லும்போது நூதனமான ஆடையாபரணங்கள் அணிந்து கொண்டு போகலாகாது.

23. எந்த விஷயமாயிருந்தாலும் அதை ஞானிகளிடம் அடிக்கடி கூறலாகாது.

24. ஞானிகள் கூறும் வார்த்தைகளுக்கு எவ்வித பதிலுங் கூறலாகாது.

25. மஹான்கள் சன்னிதானத்தில் வாசனைத் திரவியங்களணிந்து கொண்டு வரலாகாது.

26. புஷ்பம் அணிந்து கொண்டு போகலாகாது.

27. தாம்பூலம், சந்தனம் முதலிய லௌகீக சாமான்களைத் தரித்துக் கொண்டு போகக் கூடாது.

28. ஞானிகளிடம் எவ்விதக் காரியங்களையும் யோசித்துப் பேச வேண்டும்.

29. சன்னிதானத்தில் அங்கச் சேஷ்டைகள் கூடாது.



30. ஞானிகளிடம் கொடுக்கல் வாங்கல் கூடாது.

31. ஞானிகளிடஞ் சென்றிருக்குங் காலத்தில் எல்லா விஷயங்களுக்கும் அவருடைய மனது ஒத்து நடக்க வேண்டும்.

32. ஞானிகள் சன்னிதானத்தில் எவ்வித வார்த்தையானாலும் யாருடனும் பேசலாகாது.

33. அவரைப்போல நாமும் ஆகவேண்டும் மென்றே எண்ண வேண்டும்.

34. ஞானிகளிடம் எவ்விதக் காரணங் கொண்டும் மீறலாகாது.

35. ஞானிகளைக் கண்டு ஒழுங்கீனமாகப் பரீக்ஷை செய்தல் கூடாது.

36. ஞானிகளிடங் குற்றமிருப்பதாகத் தனக்குத் தோற்றினாலும் குற்றமில்லாததாகப் பாவிக்க வேண்டும்.

37. ஞானியும், ஈஸ்வரனும் ஒன்றென்று நினைக்க வேண்டும்.

38. அன்னியமாக நினைக்கக் கூடாது.

39. ஞானிகள் ஆத்மாவுந் தன்னான்மாவும் ஒன்றாக எண்ண வேண்டும்.

40. வேதாந்த விஷயமான சந்தேகங்கள் தோற்றினால் சந்தேகமில்லாதவர்களைக் கண்டு கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

41. சந்தேகமில்லாதவர்கள் ஞானியென்று எண்ண வேண்டும்.

42. ஞானிகளிடம் உறக்கப் பேசலாகாது.

43. சாத்வீக மனதுடன், தாழ்ந்த குரலுடன் மிருதுவாகப் பேசவேண்டும்.

44. ஞானிகள் முன்பு மடமட வென்று நடக்கலாகாது.

45. யாரார் எந்தெந்த அந்தஸ்துப்படி ஞானிகளிடம் பேசலாமோ, இருக்கலாமோ, அந்தந்தப்படி தவறாமல் நடக்க வேண்டும்.

46. எத்தனை தரம் ஞானிகளிடஞ் சென்றாலும் அத்தனை தரமும் அத்தனை தரமாகவே இருக்க வேண்டும்.

47. ஞானிகளிடம் லௌகீக விஷயங்களைப் பற்றிப் பேசக் கூடாது.

48. வைதீக வார்த்தைகளையுங்கூட வழியுடன் வரம்புடன் பேசவேண்டும்.

49. ஞானிகள்முன் நித்திரை, சோம்பல், மயக்கம், ஆசை இவைகளை காண்பிக்கக் கூடாது.

50. ஞானிகள் முன்னிலையில் சாய்ந்து உட்கார்ந்துக் கொள்ளுதல் காலை நீட்டிக் கொள்ளுதல் கூடாது.

51. ஞானிகள் முன் பாழ் நெற்றியுடன் வரலாகாது.

52. அவரவர் வருணாச்சிரம தர்மப்படி விபூதியோ, திருநாமமோ, சந்தன திலகமோ, இட்டுக் கொண்டு ஞானிகள் முன்பு செல்ல வேண்டும்.

53. குடும்ப விவகாரங்களை ஞானிகளிடங் கூறலாகாது.



54. ஞானிகளுக்கு நாம் ஏதாவது உபகாரம் செய்ய வேண்டுமென்றென்னலாகாது.

55. அவரிடமிருந்து தனக்கு உபகாரமிருக்கிற தென்றும் அது வேண்டுமென்றும் எண்ண வேண்டும்.

56. செல்வம் அந்தஸ்து முதலிய தன்னுடைய மகிமை களை ஞானிகளிடங் காட்டலாகாது.

57. தனக்குள்ள துக்கங்களை விலக்க வேண்டி ஞானி களிடஞ் செல்ல வேண்டும்.

58. துக்க லக்ஷணங்களையும் அதன் நிவர்த்தி லக்ஷணங்களையும் ஞானிகளிடங் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

59. ஞானிகளிடஞ் சென்றால் அவருடைய அந்தரங்க அபிப்பிராயங்களை நன்றாயறிந்து கொள்ள வேண்டும்.

60. ஏனெனில் அதன்படி தானும் அனுஷ்டிக்க வேண்டி யிருப்பதனால் தான்.

61. ஞானிகளைத் தெரிசித்த தினமே சுபதினமென் றெண்ண வேண்டும்.

62. நித்திய மிது அநித்திய மிதுவெனு மறிவோடு ஞானி களை தரிசிக்கப் புக வேண்டும்.

63. அநித்திய வாழ்வாகிய அக்னியில் சிக்கிய புழுவென வெதும்பி உழன்றபோதும், இனி விடுதலை யேற் படக் கூடிய ஸ்தானம் ஞானிகள் சன்னிதான மென்றே நினைத்து ஞானிகளிடஞ் செல்ல வேண்டும்.

64. ஞானி சமாதியிருக்கும்போது ஏதோ போய்விட்டால் அப்புறம் போகவேண்டும். இல்லையாயின் மௌன மாய் இருக்க வேண்டும்.

65. ஞானிகள் சாத்வீக குணத்தோடிருக்கும்போது ஸ்ரீமந் நாராயணனாக நினைக்க வேண்டும்.

66. இராஜச குணத்தோடிருக்கும்போது பிரமாவாக நினைக்க வேண்டும்.

67. தாமத குணத்தோடிருக்கும்போது ருத்திரனாக நினைக்க வேண்டும்.

68. உபதேசஞ் செய்யும்போது சதாசிவனாக நினைக்க வேண்டும்.

69. இனிமையாக பேசும்போது சந்திரனாக நினைக்க வேண்டும்.

70. கடுமையாக பேசும்போது சூரியனாக நினைக்க வேண்டும்.

71. சம்சாரபந்தத்தோடிருக்கும்போது ஸ்ரீ கிருஷ்ணனாக நினைக்க வேண்டும்.

72. உதாரமாக இருக்கும்போது ஸ்ரீராமனாக நினைக்க வேண்டும்.

73. ஏகாந்தமாயிருக்கும்போது தட்சிணாமூர்த்தியாக நினைக்க வேண்டும்.

74. சும்மா இருக்கும்போது மகேஸ்வரனாக நினைக்க வேண்டும்.

75. சாந்தமாக இருக்கும்போது கங்காதேவியாக நினைக்க வேண்டும்.



76. எல்லாருடன் கலந்திருக்கும்போது விராட சொரூப மாக நினைக்க வேண்டும்.

77 ஒன்றிலுங் கலவாமலிருக்கும்போது உண்மை ஞானியென்று நினைக்க வேண்டும்.

78. நிருவிகற்ப சமாதியிலிருக்கும்போது அகண்டாகார பிரஹ்மமென்று நினைக்க வேண்டும்.

79. ஞானிகளிடஞ் செல்லும் போதெல்லாம் தவறாமல் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்ய வேண்டும்.

80. அவரவர்களுடைய மனதிலுள்ள சந்தேகங் களெல்லாந் தீர வேண்டிய யதார்த்தமாக ஞானி களிடங் கேட்க வேண்டும்.

81. கேட்கும்போது தன் மனதிற்குச் சம்மதமாகவே இருக்க வேண்டும்.

82. ஜென்ம நாசவுபாயங்களை ஞானிகளிடங் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

83. ஞானிகளிடம் வேதாந்தங்களின் மூவிதப் பாகுபாடு களை விபரமாகக் கேட்க வேண்டும்.

64. கேட்டது மாத்திரங் காணாமல் அனுஷ்டிக்க வேண்டிய முறைமைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

85. ஞானியின் தரிசனமான பின்பு அவரது பாத நீரை உட்கொள்ள வேண்டும்.

86. ஞானிகளிடஞ் சென்றிருக்கும்போது நாமும் நிரு விகற்ப சமாதியை அடைய வேண்டுமென் றெண்ண வேண்டும்.

87. அடிக்கடி ஆத்ம ஞானிகளைத் தரிசனங் வேண்டு மென்றெண்ண வேண்டும்.

88. எப்போதும் பிரஹ்ம ஞானிகள் தரிசனங் கிடைக்க வேண்டுமென்று ஈஸ்வரனையும் பிரஹ்ம வித்துக் களையும் பிரார்த்திக்க வேண்டும்.

89. பிரஹ்ம ஞானிகள் லக்ஷணங்களைப் பெரியவர் களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

90. பற்பல விவகாரமுடைய ஞானிகளா யிருந்தாலும் ஒன்றென்றே நினைக்க வேண்டும்.

91. தன்னுடைய சக்திகேற்றபடி ஞானிகளிடம் பேச வேண்டும்.

92. ஞானிகள் சன்னிதானத்தில் நின்றிருக்கும்போது குரு ஸ்தோத்திரங் கூறவேண்டும்.

93. பின்பு சதாகாலமும் காரண பஞ்சாக்ஷர ஜெபஞ் செய்ய வேண்டும்.

94. மஹான்களிடமிருந்து திரும்பி வீட்டுக்கு வரும் வரையிலும் அஷ்டாக்ஷர மந்திர ஜெபம் செய்ய வேண்டும்.

95. பிரஹ்ம ஞானிகளிருக்குமிட மெல்லாந் துரியாதீத மென்றே நினைக்க வேண்டும்.

96. ஞானிகளிருக்குமிடத்தில் சர்வபுண்ணிய தீர்த்தங் களிமிருக்கின்றன வென்றெண்ண வேண்டும்.

97. எல்லாத் தேவர்களு மவரேயென் றெண்ண வேண்டும்.



98. பிரஹ்ம ஞானிகளிடஞ் சென்றபோதுந் திரும்பி வரும்போதும் வந்தபின் அடிக்கடியும் ஞானிகள் திவ்ய கல்யாண குணங்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டும்.

99. ஸ்ரீமத் அகண்டபரிபூரண, சச்சிதானந்த, பரவியாபக சின்மய, சிதாகாச, சுத்தாத்வைத, கைவல்ய நிர்க்குண, நிராமய, நிர்மல, நிரஞ்சன, நிர்விகார, நிராதார, சாந்த, சுத்த, புத்த, சைதன்ய, சாக்ஷத்கார, வடிவமே உருக்கொண்டு பிரஹ்ம ஞானிகளாய் நம்மை ஆட்கொள்ள எழுந்தருளியிருக்கின்ற தென்று நம்பி, ஞானிகள் எதை அடைந்தார்களோ, எதை அடைந்தால் ஞானியோ, எதை அடைந்தபின் இன்னொன்றை அடைவதில்லையோ, எதை அடைந்தபின் எல்லாம் அடைந்ததாகுமோ, அத்தகைய நிலைமையை நாமும் அடைய வேண்டு மென்று அப்பியாசித்து அடைய வேண்டும்.

ஓம் தத் ஸத்

ஓம்

தத் ஓம் ஸத்

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# காந்தி

## முகவுரை

அன்பர்களே !

ஸ்ரீ சுத்த அத்வைத அருட்கவி ஸ்ரீ-ல-ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் ஓர்நாள்* சேலம் என்னும் நகரத்திலிருந்து கும்பகோணம் எழுந்தருளினார். அங்குள்ள பல பிரமுகர்கள் ஸ்வாமிகளை தெரிசித்துத் தங்களுக்குப் பாரத நாட்டுக் காந்தி தெரியுமோ வென்றார்கள். அதற்கு ஸ்வாமிகள் எனக்கு நன்றாய்த் தெரியு மென்று உடனே எழுந்திருந்து (காந்தி) விஷயமாக இருபத்தைந்து நிமிஷ நேரம் அந்தர்முக காந்தி, பகிர்முக காந்தி, அநாமய காந்தி, அசலாற்புத காந்தி, அகானுஷ காந்தி, வெளிப் படையான காந்தி, ஹிந்திய நாட்டுக் காந்தி, நம்முடைய காந்தி என்ற விஷயமாய் வெகு காம்பீர வுல்லாச காந்தியுடன் உபந்நியாசம் செய்தனர். இந்த நூல் முழுவதும் எல்லோருக்கும் காந்தியைத் தருவதால், இதற்கும் (காந்தி) என்ற நாமமிடப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

சகசானந்த யோகீஸ்வரன்

*சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் உபந்யசித்தது.



ஓம் தத் ஸத்

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

# காந்தி

காந்தி நாதைச் சேரவேண்டிக் காந்த நாட்டப் பாரதர்
காந்திநாதன் கருணைகொண்டு காந்தி நூலைக் காணுவார்
காந்திசோதி கமலபீடங் காந்தி நாடு கங்குலோ
காந்தியீது கதியுமீது காந்தி தெய்வங் காப்பரோ.

ஆத்ம சகோதரர்களே !

காந்திமதியின் சொப்பிரகாச சொப்பிரசன்ன மணவாளராகிய காந்தி சொரூப சர்வலாங்கார சகஸ்திர கமலபீட நிர்மலானந்த அத்வைத பஞ்ச கிருத்ய ஆசார்ய தத்பூத உபசாந்த சமன்வயத்துவ சமஸ்கார நிஜாரூட யதார்த்த வடிவ நிச்சய காந்தியனது சொச்சொரூப சர்வேஸ்வரன் அகண்டாகாரமான பாதாரவிந்தங்களை வேற்றுமையில்லாத அபேத அந்தரங்க பக்தியினால் துதித்து இன்று பேச வேண்டிய விஷயமாகிய காந்தி என்பதைப்பல பாகமாகப் பகுத்துக்கூற ஆரம்பிக்கின்றேன்.

அதாவது : 1. காந்தி என்பதென்ன 2. காந்தியின் உண்மை 3. காந்தி சொரூபம் 4. சகச காந்தி 5. காந்தி மங்கலம் 6. காந்தி சமாதி 7. காந்தி வருங்காலம் 8. காந்தியை அடையும் விதம் 9. இமிடேஷன் காந்தி 10. பரம காந்தி என்ற அதியற்புத நாகரீகமான இவ்விஷயங்களை விபரமாக உபந்யசிக்க ஆரம்பிக்கிறேன்.

இதற்கு முன் நான் பல பெரிய பட்டணம், கிராமம், புரி, மடாலயம், தடம் சாலை, சோலை, மைதானம், மடம், ஆலயம், சாவடி, பொது இடம் இவைகளில் நமது ஹிந்து மத அந்தர்பூத லட்சியார்த்த பகவானது திவ்ய விசேஷ லக்ஷணங்களை பிரசங்கித்திருந்தபோதிலும் இப்போது சர்வவுலகளுக்கும், சர்வதேவர், முனிவர், ரிஷிகள்,

மூர்த்திகள், மனுஷ்யர் இவர்களுக்கும தேஜஸ் தரக்கூடிய அபார சக்தியுள்ள (காந்தி) என்ற பெரிய விஷயத்தை அனுபவ வாயிலாகக் கூற ஆரம்பித்துத் தெளிவான செந்தமிழ் நடையில் பேச ஆரம்பித்து விட்டேன்.

அன்பர்காள்

சற்று நேரத்திற்குமுன் கூறியபடி காந்தியாவது யாதென்று சற்று ஆழ்ந்தி ஆராய்வோமானால் அதனுண்மையை நாம் உள்ளவாறு தெரிந்துக் கொள்ள லாம். அதைவிட்டுப்பாகிய திருஷ்டியால், ஸ்தூல புத்தியால், அனித்திய வுணர்ச்சியால், அறிவின் மயக்கத் தால், வெளிமனதால், ஊனக்கண்கொண்டு பார்ப்போமே யானால் அவ்விஷய திருஷ்டியால் அகக்கண் தோன்றா மல் யதார்த்தமான காந்திக்கு விரோதமான காந்தியே புலப்படும். உண்மையான காந்தியையன்றிப் பலவுண்மை யல்லாத காந்திகளில் உயர்ந்தது சூரிய காந்தி, சந்திரனது காந்தி, சுக்கிரன், பிரஹஸ்பதி, நட்சத் திரங்கள், துருவம் முதலிய காந்திகள். முதலிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் குறைந்த காந்திகளோடு கூடியவை களாயிருக்கின்றன. ஆனால் நாம் இப்போது பேச வேண்டிய காந்தி இதுவரை ஒருவராலும் ஒரு தேசத்திலும் ஒரு காலத்திலும் ஒரு இடத்திலும் உண்டாக்கப்பட்டதல்ல. நேரே கண்டு ஒருவரும் இதுவரை பேசியதல்ல. இந்தியாவிலுள்ள 1500 மத பிரிவுகளாலும் காணக்கூடியதும், கண்டதுமல்ல. மற்ற அன்னிய நாட்டுப் பற்பல மதாந்தர உணர்ச்சிகளுக்கும் எட்டியதும், எட்டக் கூடியதுமல்ல. அஞ்ஞானம் முதல் ஞானம் வரையுள்ள நூற்று முப்பத்துநான்கு (134) தத்துவங்களாலும் இதுவரை பிடித்ததல்ல. மற்றோ எனக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள தத்துவங்களுக் கும், தூக்கம், கனவு, விழிப்பு, துரியம் இவைகளுக்கும் மனம், வாக்கு, பிராணன் இவைகளுக்கும் எட்டாததாய், எங்கும் நிறைந்ததாய், சுயம்பிரகாசமாய், சத்துவ சாந்த



வடிவமாய் இராநின்ற யாதொரு காந்தியுண்டோ அவ்வஸ்துவையே நான் பேச வந்ததாகும்.

இக்காலத்தி வடிவத்தையே காணவேண்டி சுமார் இருபத்துநான்கு லக்ஷம் வருஷங்களுக்கு முன் கைலாச கிரியில் தென்பக்கத்தில் கல்லால் விருக்ஷத்தினடியில் தெற்கு முகமாக வீராசன சின்முத்திராங்க வடிவமாய் தட்சிணாமூர்த்தி (என்னும் ஈஸ்வரன்) அளவிறந்த காலம் மஹா மௌன பிரஹ்ம நிஷ்டையிலிருந்ததாகத் தெரிகிறது.

மஹாவிஷ்ணு க்ஷீராப்தியில் ஆயிரம் பணா முடிகளோடு கூடிய சர்ப்பராஜனான ஆதிசேஷன் மீது சயனித்துக் கொண்டு சாமான்ய மனுஷ்யர்களுக்குக் கிடைப்பதரிதாகிய மேற்கூறிய காந்தியை அறிவதற்கே யோக நித்திரைபுரிந்து கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. மற்றும் பிரமா, ருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன், முருகன், கணபதி முதலிய சர்வக்ஞ மூர்த்திகள் அல்லது தெய்வப் பிரதிநிதிகள் அல்லது ஜெகத்ரக்ஷக பாலர்கள் இவர்கள் சர்வபுவனங்களையும் எந்த சக்தியால் தாங்கி வருகிறார்களென்று பார்க்கில் அழிவு பெறக்கூடிய பற்பல சிற்சிறிய காந்திகளுக்கும் காந்தி தரக்கூடிய இந்துமத உச்சியில் விளங்காநின்ற அந்தர்முக அதியத்புத காந்தி யின் ஹம்ஸயோகத்தாலேயே என்றறியலாம். பின்னும், சர்வப்பிரகாசங்களுக்கும் காந்தி தரக்கூடிய யதார்த்த வடிவ காந்தியின் அனுக்கிரகத்தாலேயே நானும் இதுவரை இவ்வளவு காந்தியாக பேசினேன்.

இப்போதும் பேசுகிறேன், இனிமேலும் பேசத்தான் போகிறேன் என்பதைக் கவனிக்க எனக்கே இங்கு ஒரு போலிக் காந்தி தோற்றுகிறது. அதை பற்றிக்கூற இப்போது எனக்குச் சாவகாசமும் பூர்ண அபிப்பிராயமுமில்லை. இப்படியே முடிவில்லாமல் பேசிக் கொண்டே போனால் இப்போதெடுத்துக் கொண்ட காந்திப் பிரசங்கத்தை

முடிப்பதெவ்வாறு என்று நீங்கள் கேட்பீர்களேயானால் இடையில் முடித்துவிடக்கூடிய ஒரு மணி நேரக் காந்தியையா நான் எடுத்துப் பேசுவேன். அல்ல உத்தம மான வுயர்ந்த முதல் தரமான காந்தியிலிருந்து வுத்தம மில்லாத உயர்ந்ததாகாத கீழான காந்திவரை அடுக்கடுக் காய் நமது பாரதநாட்டு ஆதிகால மஹான்களின் இடை வெளியில்லாத வார்த்தையால் கூற ஆரம்பிக்கிறேன்.

சர்வவியாபக ஜெகத்ரக்ஷத சாந்தவடிவமான பரமாத்மா, கௌசலம், இரகசியம், மாயை, தெய்வம், துரியம், ஆண்டவன், சிவம், பரம், பரமம், வாசுதேவம், பிரஹ்மம் என்று கூறப்படுகிற அகண்டவஸ்துவைத்தான் (காந்தி) என்று கூறத்தகும். அதுதான் பரமகாந்தி அவர்தான் காந்தி என்னும் உயர்ந்தபடியில் வைக்கக் கூடியவர். அவருக்குமேல் காந்தி இல்லை. அவருக்குக் கீழான காந்திகள் பல இருக்கின்றன. அவைகள் படிப் படியே தாழ்வும் காந்தியில் குறைந்ததாகவும் தோற்றும் அவற்றை இங்கு முறையே கூற ஆரம்பிக்கிறேன்.

1.பிரஹ்ம சொரூப பாரமார்த்தீக பரம காந்தி 2 பரப் பிரஹ்ம மாயாரகித காந்தி 3 பரப்பிரஹ்ம சாவயகாந்தி 4 பரப்பிரஹ்ம வடிவ காந்தி 5 மாயமய காந்தி 6 மாயா காந்தி 7 மயமாம்ஸ மாயா காந்தி 8 மாயாசகித யீஸ்வர காந்தி 9 சகசயீஸ்வர காந்தி 10 ஈஸ்வர காந்தி 11 அவ்யக்த காந்தி 12 அவித்யா காந்தி 13 மாயாசகித அவித்யா காந்தி 14 அவித்யாரகித மாயா காந்தி 15 ஜீவ ரகித அவித்யா காந்தி 16 அவித்யா சகித ஜீவகாந்தி 17 மனோ காந்தி 18 மனோரம்ய அவித்யா காந்தி 19 மனோ அபாவ மாயா காந்தி 20 மாயாமய மனோகாந்தி 21 மாயாரகித சகித மனோகாந்தி 22 ஜீவசகித மனோ காந்தி 23 ஜீவார்ப்புத மனோ காந்தி 24 ஜீவசையோக விவேககாந்தி 25 அஞ்ஞான சகித மனோ காந்தி 26 மன்மாம்ச மதன காந்தி 27 மதிலேசன மத்ய காந்தி 28 மனோசகித பிராண



காந்தி 29 பிராண உல்லங்கன பிரமகாந்தி 30 பிராண காந்தி 31 பிராண சலன பீட காந்தி 32 அசல பிராமண அமலகாந்தி 33 பிராணசகித சூக்ஷ்ம காந்தி 34 பிராணாப் பியாச இந்திரிய காந்தி 35 பிராண ரகித பேதகாந்தி 36 பிராணாம்ச ஸ்தூல காந்தி 37 இந்திரியார்த்த ஈஸ்வர காந்தி 38 ஸ்தூல காந்தி 39 தத்துவார்த்த உலக காந்தி 40 உலக தத்துவ வுண்மைக் காந்தி 41 உலகாம்ச வுபய காந்தி முதலிய காந்திகள் இன்னும் பல இருக்கின்றன.

அவற்றை இப்போது இங்கு கூறச் சாவகாசமும் நினைப்புங் கிடையாது, ஏனெனில் எடுத்துக் கொண்ட விஷயம் முடியாமற் போய்விடும். பின்னும் பரமாத்மா, மாயை, ஈஸ்வரன், அஞ்ஞானம் ஜீவன், மனம், பிராணன், உடல், உலகம், ஆசாரம் கொள்கை, நடக்கை இவைகள் படிப்படியே குறைந்த காந்தியோடு கூடியவைகளாயிருக் கின்றன.

எல்லாக் காந்திகளுக்கும் காந்தி தரக்கூடிய ஆதார காந்தியைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் ஆதார காந்திக்குக் கீழ்ப்பட்ட காந்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம், அதற்கு வேண்டிய ஞான முயற்சி களை நாம் ஒழுங்காக அனுஷ்டித்து வருவதில்லை. லௌகீக சம்பந்த திருஷ்டாந்தமாக உலக காந்திகளை முறையே கூறப்புகுவோமேயானால் தீப முதல் பரமாத்மா வரை மூவாயிரம் (3000) காந்திகள் புறப்படுவார்கள். அவர் களை முறையேமுறைப்படி அனுபவித்துக் கொண்டு போனால் அதனதன் உண்மையைத் தெரிந்து கொள்ள லாம். இப்படியே நமது ஆதிகால பாரதர்களில் உயர்ந்த வர்களான :-

1 பிரஹ்ம ரிஷிகள் 2 மஹரிஷிகள் 3 ரிஷீஸ்வரர்கள் 4 ரிஷிகள் 5 முனீஸ்வரர்கள் 6 முனீந்திரர்கள் 7 முனி நாதர்கள் 8 முனிகள் 9 சித்த மஹான்கள் 10 சித்தாதிகள் 11 சித்தர்கள் 12 யோகிகள் 13 யோகீஸ்வரர்கள்

14 யோகீந்திரர்கள் 15 ஞானிகள் 16 பக்தசிகாமணிகள் 17 பக்தர்கள் 18 முக்தர்கள் 19 அன்பர்கள் முதலிய அபார ஈஸ்வர அம்சமுடையவர்கள் நமது பாரத நாட்டுப் பிரஹ்ம காந்தியைக் கண்டுபிடித்ததாகத் தெரிகிறது.

நாமும் இந்த மஹத்கோஷ பூமியாகிய பாரத நாட்டிற் பிறந்து இங்கேயே வளர்ந்து இந்துமதஸ்ர்களென்று பெய ரெடுத்துக் கொண்டு உண்மையான காந்தியை அறியாம லிருப்பது நமக்கு பெரிய வெட்கமாகத் தோற்ற மில்லாமல் உத்தியோக காந்தி, வியாபார காந்தி, உலக காந்தி, உடல் காந்தி, ஆடையாபரண காந்தி, மாதர் காந்தி முதலிய போலிக் காந்திகளைக் கண்டு மயங்கி அதிலே ஆழ்ந்து நமது யதார்த்தமான பாரத நாட்டுக் காந்தியை அன்னியர் களுக்கு (அதாவது) அஞ்ஞானத்திற்குப் பறிகொடுத்து விட்டு வீணாக ஏமாந்து திரிகின்றோம்.

நம்முடைய பாரதநாட்டுப் பிரபல காந்தியை நாமே அஜாக்ரதையாய் மாயையென்கிற அன்னியர்களுக்கு ஒப்புவித்துவிட்டு மறுபடியும் வாங்குவதென்றால் முற் கூறிய எதார்த்த காந்தியின் வழியாய் வாங்கினா லொழிய வேறு வழியிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

கூடிய சீக்கிரத்தில் (அதாவது) பலவென்னும் பதத் தில் பல ஆண்டைத் தள்ளிச் சில ஆண்டில் ஓர் பெரிய உன்னத ஸ்தாபனத்திலிருந்து பாரத நாட்டுக் காந்தி புறப்படப் போகிறது. அந்தக்காந்தி இப்போது எங்கிருக்கிற தென்று சிலர் சங்கிக்கலாம். ஆனால் அவர் இப்போது எங்குமிருப்பாரென்று மட்டும் பதில் சொல்லலாம். அதற்கு மேல் பதில் கூற வரவேண்டிய காலமில்லை. ஆனால் அதைப்பற்றி அதிக விரிவாக இப்போது பேசுவேனென்றா லும் பேசுவதல்ல, பேசுகிற காலம் வரும் போது பேசிக் கொள்ளுகிறேன். நமது பாரதநாட்டுப் பெரியவர்கள் (மேல் நாட்டாரது காலமல்லாத காலத்தில் முயற்சிக்க) முன் வராதிருப்பதற்குக் காரணம் யாதென்பீரேல், பின்னால்



வரக்கூடிய காந்தியை எதிர்பார்த்த பலத்தாலொன்றறிக. இந்த நாளைக்குச் சில நாள் கழிந்தபின்னோ, சில ஆண்டு களுக்குப் பின்னோ ஆறாண்டிற்குப் பிற்பாடோ, பிரபவ வருஷ முடிவிலோ, ஆயிரத்திதொள்ளாயிரத்து இருபத் தேழிலோ திடீரென்று வரக்கூடிய காந்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நாங்களும் எங்களது பரிவாரத் தார்களும் தற்போது இந்திய அபிமானமுள்ள பிரபல சந்நியாசி களாகவே தோற்றுவோம் எங்களது உண்மைக் கூட்டம் இப்போது இந்தியாவின் உயர்ந்த பாகத்தில் இருக்கிறது.

இவ்வளவு ரகஸ்ய வார்த்தைகள் இதற்கு முன் இவ்வளவு பகிரங்கமாய் வந்திருக்கவில்லை. தற்போது பிரஹ்ம காந்தி புறப்படும் சமயமாய் விடுகிற பற்பல அறி குறிகள் தோன்றுகின்றன. ஞானம் வருவதற்குமுன் பக்தி உதயமாவது போலவும் பிரமலோகப்பிராப்பியனுக்குச் சூரிய லோகம் வருவது போலவும், துரியானுபவம் வருமுன் நனவிற் சுழுத்தி (அதாவது) தூங்காமல் தூங்குகிற நிலை வருவது போலவும், சண்டமாருதக் காற்று, பேரிடி, சிற்றிடி, மின்னல் இவைகள் வருவதுபோல வும், சாதாரணமான தூக்கம் வருவதற்கு முன் கொட்டாவி வருவது போலவும் நமது பாரத நாட்டுப் பிரஹ்ம காந்தி வருவதற்குமுன் அறிகுறியாக நமது காந்தி அடிகள் தோன்றியிருக்கிறார்கள்.

சில நாட்களுக்குப் பின் வரக்கூடிய (காந்தி) என்கிற மழைக்கு இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் பெரிய மின்னல்; இராமதீர்த்தர் - புயல் காற்று, தோதாபுரி - தென்றல், விவேகானந்தர் - இடைவிடாத இடி, அவரது கூட்டத்தார்கள் - பல மின்னல்கள், பாலகெங்காதர திலகர் - சண்டமாருதக்காற்று, மற்றும் பலபேர்கள் - ஆரவாரங்கள் இவைகள் மழையின் பிரபல அறிகுறிகள். இவ்விதமாக நமது பாரத நாட்டுக் காந்தி புறப்படப் போகிறது. பின்னும், நான் ஒரு கட்சியிலும் சேர்ந்தவனல்ல வென்றே சொல்லு

வேன் அதாவது பிரம சமாஜம், ஆரிய சமாஜம், பிரமஞானச் சங்கம், இராமகிருஷ்ண விவேகானந்த மதச் சங்கம், தேசீயச் சங்கம், மிதவாதச் சங்கம், அமிதவாதச் சங்கம் மற்றும் இன்னும் இங்கு எழுதத் தவறிய பல எத்தனை சங்கங்களிலும் நான் சம்பந்தப்பட்டவனல்ல. மற்றோ பாரத நாட்டுப் பிரஹ்மகாந்தியைச் சேர்ந்தவனென்று மட்டும் சொல்வேன்.

பாரத நாட்டு கெம்பீர வீர தீர வுல்லாச வாசிகளே, நீங்கள் யாவரும் அதிக தைரியத்துடன் ஒருவரையும் லட்சியஞ் செய்யாமல் அபார வூக்கத்துடன் தயாராக இருங்கள்.

கடவுள் ஒருவரைத்தவிர வேறு ஒருவரையும் நம்பாதீர்கள், லட்சியமும் செய்யாதீர்கள், ஒருவருக்கும் அடங்காதீர்கள். உள்ளிலும் வெளியிலும் சுதந்திர வாசிகளாகவே இருங்கள். உள்ளபடி நாம் ஒருவருக்கு மட்டுமின்றி மற்றையருக்கு ஆள் அல்ல வென்றெண்ணுங்கள். திடீரென்று ஓர் உணர்ச்சி பிறக்கப் போகிறது. அப்போது நாம் கூடுவோம். அதிகமாகப் பேசலாமென்றாலோ இடையில் ஓர் அணைவந்து தட்டுகிறது. அணையையுந் தாண்டி விடலாமென்றாலோ ஈஸ்வரன் ஆக்ஞையை மீறுகிறதாகிறது. மீறினாலென்னவென்றாலோ நாம் இந்துவல்லாமலாய் விடுவோம். ஆதலால் அணைக்கடங்கியே (மீறி ஒருமனதுடன்) பேச ஆரம்பிப்பது நலம். இப்போது நாம் நமது இந்திய ஆதிகால நாகரீகத்தை விட்டுவிடாமல் மேல் நாட்டாரது ஞான விரோதச் செயல்களை விட்டொழித்து நமது யதார்த்தப் பிரஹ்ம காந்தியை எதிர் பார்த்தவண்ணமாகவே தயாராக இருங்கள். கூடிய சொற்ப காலத்தில் ஸ்ரீமந் நாராயணாம்ச அவதார புருஷ ஜெகத் ரக்ஷக ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் குருக்ஷேத்திர பூமியில் சத்தியமாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றுங்காலம் வந்து விட்டது. நாம் கூட்டத்துடன்



காந்தியாகிய பரம வஸ்துவை எதிர்பார்த்த வண்ணமாகவே ஒன்றுகூடி, ஏகமாகப் பிறிவில்லாத மனதுடன், ஏகாக்ரமாக உபசாந்த உல்லாச நேச உறுதியுடன், பெருங் கூட்டத்துடன், இந்துமத பிளாட்பாரத்தில், ஆத்ம சகோதர ஒற்றுமை வாத்திய கோஷத்துடன், அன்னியநாட்டு நாகரீகத்தை விட்டுவிட்டோமென்கிற பிளாட்பாரக் கல்லின்மீது ஏறி மிதித்துக் கொண்டு துரிய ரெயில்வே ஸ்டேஷனில், துரியாதீத வெயிட்டிங் ரூம் பக்கத்தில் பிரஹ்மானந்தக் காற்றடிக்கிற பாங்கா வீச்சினால், ஆத்மஞான ஞாபக சர்வெண்டுகளுடனே சொப்பிரகாச உதார அதாரட்ய, அமானுஷமென்கிற ரோஜா, மல்லிகை, முல்லை முதலிய பூமாலைகளுடனும், பக்தி, மஹான் என்கிற ஸ்டேஷன் மாஸ்டர் சகிதம், பிரஹ்ம ஞானக் கம்பார்ட்டுமெண்டில் யோகாரூட ஸ்பெஷல் ரெயிலில் புருஷப் பிரயத்தனப் பிரேக்வான் வண்டியுடன், தட்சிணா மூர்த்தி, மஹான் என்னப்படுகிற கார்டுடன், அனுபவானந்தமென்னும் இஞ்சின் வேகத்துடன், பற்பல யோகஞான வண்டித் தொடர்களுடன், வரக்கூடிய நமது பரம காந்தியை எதிர் கொண்டு, நிருவிகற்பசமாதி யென்கிற வந்தனோபசாரப் பத்திரம் படித்துவிட்டு சவிகற்பப் படியிலிறங்கி அஞ்ஞான மென்ற ரெயில்வே கம்பார்ட்டுமெண்டை விலக்கி, அவித்தை யென்ற ரயில்கேட்டைத் தாண்டி அவ்யக்த மோட்டாரில், அநாமய வீதிவழியாய், அதிசூக்ஷும ட்ரைவருடன், அகண்டாகார பாரதநாட்டுக் காந்தி சொரூபத்தை எதிர் கொள்வீராக.

கூடிய காலத்தில் நமது பாரதநாட்டுக்கு ஓர் காந்தி புறப்படப் போகிறதென்றால், இதற்கு முன் இந்நாடு காந்தியில்லாதிருந்ததாவென்று கேள்வி யுண்டாகும். அதற்குச் சமாதானமாவது யாதென்றால் திருஷ்டாந்தமாக ஓர் விளக்கு நன்றான பிரகாச காந்தியோடு கூடியதாயிருந்தாலும் அதை மூடிக்கொண்டிருக்கிற கிளாஸ் அழுக்காயும்,

அசுத்தமாயுமிருந்தால் விளக்கு மங்கலாய் விடுகிறது. கிளாஸ் அழுக்கின்றிச் சுத்தமாயிருந்தால் விளக்கு நன்றாய்ப் பிரகாசிக்கிறது. ஆனால் பார்ப்பவர்கள் கிளாஸ் குற்றத்தைக் கவனியாமல் விளக்கு மங்கிவிட்டதென் பார்கள். உள்ளபடி குற்றம் விளக்கிற் கிடையாது. கிளாஸில் தானென்பதுபோல தாஷ்டாஷ்டாந்தத்திலும், பாரதநாடு விளக்கு அதன் விளக்கு தற்போது மங்கியிருப்பதற்குக் காரணம் பாரதநாட்டு விளக்கை மூடிக்கொண்டிருக்கிற கிளாஸ் குற்றமேயாகும். அந்தக் கிளாஸ் யாதென்று பார்ப்போமானால் ஐரோப்பிய அசுத்த துருப்பிடித்த கிளாஸ் என்பதேயாகும். இந்த மங்கலான கிளாஸ் நமது பாரதநாட்டு விளக்குப் பிரகாசத்தைமூடியிருப்பதால் பாரத நாட்டு விளக்கு மங்கி விட்டது. பார்ப்பவர்கள் பாரத நாட்டு விளக்கு மங்கி விட்டதென்பார்கள். கிளாஸ் குற்றத்தைக் கவனிப்பதில்லை. அந்தத் துருப்பிடித்த அசுத்த ரூப மங்கலான நாகரீகமற்ற ஐரோப்பியக் கிளாஸைச் சுத்தம் செய்து நம் பாரத நாட்டு விளக்குக்கு மூடுவோமானால் விளக்கும் பிரகாசமாயிருக்கும். ஆனபடியால் கிளாஸைச் சுத்தம் பண்ண வேண்டிய வேலையை அதிசீக்கிரமாக ஜாக்கிரதையுடன் வீரசூர கெம்பீர பாரத ரோஷத்துடன் ஆரம்பியுங்கள். அதற்காகத் தான் நமது அவதாராம்ச புருஷ ராகிய மஹான் ஸ்ரீ விவேகானந்தர் அவதரித்ததும், தனது சுயநன்மையாகிய பிரஹ்ம சுகத்தையும் விரும்பாமல் பாரத நாட்டுக்கு யதார்த்தமான தேஜஸை நன்றாகத் தெரிய வேண்டியும் கிளாஸை சுத்தம் பண்ண வேண்டியும் மேல் நாடுகளுக்குச் சென்று பாடுபட்டதும் அளவில்லை. நமது அன்பு வடிவான காந்தியடிகளும் இதுவரை பாடுபட்டதும், தற்போது பாடுபடுகிறதும், இனிப் பாடுபடப்போவதும் இதற்கு என்றே எண்ணுங்கள். யதார்த்த பாரதநாட்டுப் பிரஹ்மகாந்தியை அடைய வேண்டிய அனாதிகாலந் தொட்டு வந்த தாயாதிகளாகிய பாரதநாட்டுச் சகோதர சகோதரிகளே நமது காந்தி அடிகள் கூறுகிறபடியிலே



நின்று கீழிறங்கி விடாமல் உதார கெம்பீர சமரஸ நோக்கத்துடன் ஸ்திரமாக நிற்பீர்களாக. பாரத நாட்டுப் பிரகாச பரப்பிரஹ்ம காந்தி புருஷனும், நமது பாரதமாதாவும் துரியாதீத மாடியின்மீது, துரிய சப்ரமஞ்சக் கட்டிலின் மீது, சுவானுபவப் பஞ்சணைமேலே யேறி நிருவிகற்ப அமளி நடத்தி அதில் நின்று கெர்ப்பமாகி வுதித்த நமது அந்தரங்கமான சுதந்தர தேசமான பாரத மாதாவின் புத்திரர்கள் பலர் பாரத கண்டத்தின் இரகஸ்ய இடங்களில் வசித்துக் காலத்தை எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறார்கள். இது இவ்வண்ணமே நிற்க. பாரதமாதாவின் புத்திரர்கள் சிலர் மாத்திரம் இப்போது கொஞ்சம் வெளித்தோன்றியிருப்பது தெரிந்த விஷயமேயாம்.

ஆதிகாலத்தில் ஸ்ரீராமச்சந்திர பகவானிடமுள்ள பக்தர்களில் ஹனுமார் ஒருவர், விபீஷணர் ஒருவர். அதில் ஹனுமார் பிடிவாதனமான கண்டிப்போடு கூடிய முரட்டுப் பக்தர். விபீஷணர் சாத்வீக நளின கெம்பீர சமயோஜித சாந்த பக்தர். இவ்விரண்டு பக்தர்களிடமும் ஸ்ரீராம பிரானுக்கு ஒரே மாதிரி பிரியமிருந்ததுபோல, நமது பாரத மாதாவிற்கு திலகர் ஒரு பக்தர், காந்தி ஒரு பக்தர் இவ்விருவர்களில் திலகர் ஹனுமார் போன்றவர், காந்தி விபீஷணர் போன்றவர். இவ்விரு பக்தர்களிடமும் நமது பாரதமாதாவிற்கு ஒரே சமரஸமான பிரியமிருக்கிறதுபோல நாமும் யாதொரு துவேஷமுமில்லாமல் சர்வ சுதந்திர வாழ்வை அடைய வேண்டிச் சாந்தமாக எதிர்த்து நித்திய பரமபத அந்தரங்க சுதந்திரத்தையும், அனித்திய வுலக விஷய பகிரங்க விஷயத்தையும், அதன் பிரபல சுதந்தரத்தையும், நாம் அடையுமாறு நாம் எல்லோரும் நமது பாரத நாட்டு ஆதி தெய்வீக ப்ரம்ம காந்தி சொரூப பகவானது பாதாரவிந்தங்களை அனவரதம் அதிதீவிர பக்குவ அபார சாரஸ பக்தியுடன் அந்தரங்கமாக ஸ்தோத்திரம் செய்வோமாக.

ஓம் தத் ஸத்

ஓம்

தத் ஸத்

மகாத்மாஜீ
நினைவு மலர்

# காந்தி புஷ்பம்

## அண்ணல் விரும்பும் அற்புத மலர்கள்

அஹிம்ஸாப்ரதமம் புஷ்பம் - புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:
சர்வபூததயா புஷ்பம் - க்ஷமாபூஷ்பம் விசேஷத:
சாந்தி: புஷ்பம், தப: புஷ்பம் - த்யான புஷ்பம் ததைவச:
ஸத்யம் அஷ்டவிதம் புஷ்பம் - காந்தி ப்ரீதிகரம் பவேத்.

1. **அஹிம்ஸை :** மன, மொழி, மெய்களால் எவ்வுயிர்கட்கும் எவ்வித தீங்கும் செய்யாதிருத்தல்.

   "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணா செய்யாமை தலை. (குறள்)

2. **இந்திரிய நிக்ரஹம் :** மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் தீயவிடங்களில் செல்ல விடாது தடுத்தல்.

   "ஆடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
   வேண்டிய எல்லாம் ஒருங்கு. (குறள்)

3. **சர்வபூத தயை :** எல்லா ஜீவர்களுடத்தும் கருணை.

   அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
   கென்பு தோல்போர்த்த உடம்பு. (குறள்)

4. **க்ஷமை :** இன்ப துன்பங்களில் சம நோக்கு.

   கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
   கோடாமை சான்றோர்க் கணி. (குறள்)

5. **சாந்தி :** சாந்தம், கோபமின்மை

   அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை
   ஆரிரு ளுய்த்து விடும். (குறள்)



6. **தபம் :** பிரம்மசரியம், கொல்லாமை, நாவையும் மனதையும் அடக்குதல், இராஜஸ, தாமஸ குணங்களை விடுதல்.

   உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
   அற்றே தவத் திற்குரு. (குறள்)

7. **த்யானம் :** சகலலோகங்களிலு முள்ள சகல மதஸ்தர்களும் ஒப்புக் கொள்ளக் கூடிய சர்வசக்தி வாய்ந்த **பரமாத்மனை** இதய கமலத்திலிருந்து பூஜித்தல்.

   மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
   நிலமிசை நீடுவாழ் வார். (குறள்)

8. **சத்யம் :** நெறி தவறாதிருத்தல் உண்மையே பேசுதல். (மெய்ம்மை மேன்மை தரும்)

   எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
   பொய்யா விளக்கே விளக்கு. (குறள்)

(இவைகள் ஸ்ரீ மகாத்மாஜீயின் முக்கிய கொள்கைகள்.)

இத்தூய மலர்களே அண்ணலின் வழிபாட்டுக் குறித்தாணவை. ஆதலால் இம்மலர்களாலேயே இறைவனை வழிபடுவோமாக. மேலான இந்த பூஜையை அண்ணலும் அங்கீகரிப்பார். அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியடிகள் விரும்புவதும் இதுவே.

பரம பவித்தரமான மகாத்மாகளுக்கு சிறந்த ஞாபகார்த்தம் அவர்களுடைய அருளுபதேசங்களை பின்பற்றி நடந்து கொள்ளுவதுதான்.

**நாடீர் நாடோரும் வாடாமலர் கொண்டு.**
**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:**

ஸ்ரீ விலக்ஷணானந்த ஆஸ்ரமம்
மேல்மாயில் அஞ்சல், காட்பாடி வழி.

ஓம்

தத் ஓம் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்தர்

## சத்திய ஞான ஆசாரம்

1. கொல்லாமை
2. பொய் பேசாமை
3. களவின்மை
4. புலாலுண்ணாமை
5. தெய்வ சம்மதமில்லாததும், தர்ம விரோதமானது மாகிய காமத்திற்கு செல்லாமை.
6. நடுப்பகலுக்குப்பின் உண்ணாமை.
7. குறைத்துச் சாப்பிடுதல்.
8. வாசனைச் சாமான்கள், வாசனைத் தைலங்கள் உபயோகியாதிருத்தல்.
9. ஆட்டம், பாட்டு, நாடகம், சினிமா, சர்க்கஸ் இவை களை பாராதிருத்தல்.
10. காம சங்கல்பத்தை ஹிருதய கோசத்தினினறகற்றி வைத்தல்.
11. மரம், செடி, கொடி உள்பட ஒரு ஜீவப் பிராணிக்கும் தீங்கு செய்யாமை.
12. பிறர் குற்றங் கூறாமை.



13. அசிரத்தை, சோம்பல், உஷ்ணம் இவைகளைக் கொடுக்கக் கூடிய மிருதுவான படுக்கை, ஆஸனம் முதலியவற்றை உபயோகியாதிருத்தல்.
14. வெறுப்பும் கடுகடுப்புமான வசனங்களை அகற்றுதல்.
15. புத்தியை மயக்கக் கூடிய வஸ்துக்களை உட்கொள்ளாமை.
16. தெய்வ சங்கல்பத்திற்கு விரோதம் செய்யாமை.
17. தமோ குண ரஜோ குண ஜனங்களிடத்திலும், அற்ப சங்கங்களிலும் பழகாதிருத்தல்.
18. சுத்தமும் சத்துவமுமான ஆகாரத்தை உட் கொள்ளுதல்.
19. பத்து இந்திரியங்களையும் பத்துவித உபாயங்களால் கெட்ட மார்க்கங்களினின்றுந் திருப்பி உத்தம மார்க்கத்திற் செலுத்துதல்.
20. தெய்வம், குரு, வேதம், நன்னெறி இவற்றை நிந்தை செய்யாதிருத்தல்.
21. தெய்வீகத் தன்மை, ஜன்ம மரண துக்கம் இவைகள் தெரியாதவர்களிடம் பழகாதிருத்தல்.
22. பஞ்சேந்திரியங்களுக்கு அடிமையாகாதிருப்பது.
23. பாபச் செயல்களை அடியோடு அகற்றுதல்.
24. ரஜோ குண, தமோகுணங்களுக்கும் அவற்றை யொட்டிய காரியங்களுக்கும் இடங்கொடாதிருத்தல்.
25. தினந்தோறும் சொல்ப நாழிகையாவது பிரஹ்ம விசாரணை செய்தல்.

ஓம் தத் ஸத்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர்
# சத்திய ஞான ஊர்த்வகதி

1. தன்னால் கூடியவரை ஜீவாத்மாக்களின் மனத்தை ஊர்த்வககன மார்க்கத்தில் செலுத்தப் பாடுபடுதல்.
2. இறந்துபோனவர்களைக் குறித்தும் இறக்கப் போகிற வர்களைப் பற்றியும் வருந்தாதிருத்தல்.
3. எந்தவித சுக துக்கங்களுக்கும் இடங்கொடாதிருத்தல்.
4. பிரிவைப் பற்றி ஆராய்ச்சிச் செய்து வருந்தாதிருத்தல்.
5. எது வந்தாலும் சாகரம் போன்று உள்ளடக்கி விடுதல்.
6. சக்திக்குத் தக்கபடி ஏழைகளுக்குத் தானம் கொடுத்தல்.
7. கதியற்றவர்களை ஆதரித்தல்.
8. தன் சொந்த ஸ்தானத்திலிருந்து மனதை ஓடவிடாது தடுத்தல்.
9. உண்ணல், உறங்கல், அந்தர்முகப்படல் இவை களை அந்தரங்கத்தில் வைத்திருத்தல்.
10. சர்வ ஜீவர்களிடத்திலும் சமமான அன்பு பாராட்டல்.
11. அநேகமாக எப்போதும் தனிமையாக இருத்தல்.
12. எதிலும் இயற்கைத் தன்மையையே நாடுதல்.
13. சரீரத்திற்கு வியாதியையும் மனதிற்கு மயக்கத்தை யும் கொடுக்கக் கூடிய ஆகார பானங்களை அகற்றி விடுதல்.



14. ஒருவரையுங் கண்டு அஞ்சாதிருத்தல்.
15. தன் சரீரத்திற்குள்ளிருக்கிற சத்திய ஞான தெய்வ சக்தியைப் பிறர் உதவியின்றித் தானே அறிய முயற்சித்தல்.
16. குற்றவாளியைக் குற்ற லக்ஷணங்காட்டிப் புத்தி போதித்து மன்னித்தல்.
17. மனதை அடிக்கடி தியானத்திற்செலுத்தி உலகத்தை யும் சரீரத்தையும் மறந்து பழகுதல்.
18. நாம் செய்யும் புண்ணிய காரியங்களில் பிறரையும் ஈடுபடும்படி செய்தல்.
19. புண்ணிய காரியங்கள் செய்பவர்களைப் பார்த்துச் சந்தோஷப்படுதல்.
20. பூஜிக்கத் தகுந்தவர்களை பூஜித்தல்.
21. தன்னால் முடிகிறவரை பிறருக்கு உபகாரம் செய்தல்.
22. இந்திரியங்களுக்கு ஓய்வு கொடுத்தல்.
23. மனதிற்குச் சாந்தி, புத்திக்குத் தெளிவு இவற்றை அடைதல்.
24. நிராசையோடு தன்னை விசாரித்து அதைப் பூர்ணமாக அடைதல்.
25. ஆதி வியாதி இவ்விரண்டிலும் ஆதியின் தன்மையை விசாரித்து வியாதியைப் போக்க முயற்சித்தல்.
26. எல்லா ஜீவப் பிராணிகளிடத்திலும் அன்பும், இரக்க மும் காட்டுதல்.
27. தூஷணை செய்பவர்களிடம் அதிக அன்பு காட்டி விஸ்வசித்தல்.

ஓம் தத் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்தர்
## சத்ய ஞான போதனை

ஆர்யாவர்த்த ஆஸ்திக வைதீக சிகாமணிகளே !

நமது இந்திரியங்களையும் மனத்தையும் பரிசுத்தி செய்யப்பட்டு வந்தால் கடவுளை நோக்கிச் செல்லுங் காரியத்தில் தடையின்றிய பிரவிர்த்தி ஏற்படும். இந்திரிய மன சுத்தமில்லாதவன் செய்கிற தேச சேவை மத கைங்கர்யம், தெய்வ பக்தி, ஞான முயற்சி இவைகள் பயனற்று விடுகின்றன. மனித வர்க்கத்தில் சரீர தோற்றத்தைக் கண்டு இவன் பெரிய ஜாதி அவன் சிறிய ஜாதி, இவன் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன் என்ற அஞ் ஞான பேத புத்தியை இன்று முதல் இந்த நிமிஷ முதல் உதறித் தள்ளிவிட்டு மறுகாரியம் பாருங்கள். நமக்குள் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது எந்த கடவுளோ அவரே சகல ஜீவராசிகளுக்குள்ளும் குடிகொண்டிருக்கிறாரென் பதை மட்டும் உங்களுடைய நடு நெஞ்சில் பதிய வைத்து விடுங்கள். யாரை தூஷித்தாலும், குறைவாக நினைத்தா லும் கடவுளையே தூஷித்தும் குறைவாக நினைத்துமா கிறது. புழு முதல் சதுர்முக பிரஹ்மா வரை உற்று நோக்கில் ஒரே கடவுள் தானென்று பார்த்து வந்தால் ஒருவரிடத்திலும் ராகத்வேஷமுண்டாகக் காரணமில்லை. சர்வமும் பிரஹ்ம சொரூபமென்று பாவனை செய்து வந்தால் நாளடைவில் மனதிலுள்ள பல ஜன்மாந்தர அழுக்குகள் குறைவுபட்டு சித்த சுத்தியாகி அதன் மூல மாக ஆசாரிய ஞானம், பிரஹ்ம ஞானம் லப்தமாகி இனிப் பிறவாத மோக்ஷ சாம்ப்ராஜ்யம் வாய்த்து விடுகின்றது. தேசம் மதம் ஞானம் இம்மூன்றும் ஒன்றிற்கொன்று பிரிக்க



முடியாத தத்துவங்கள். ஒருவன் தன் சரீரமுண்டான குடும்பம் மாதா, பிதா, குரு இவர்களுக்கு கடமைப்பட்ட வன்போல் தான் பிறந்த தேசத்திற்கும் கைங்கரியம் செய்ய கடமைப்பட்டிருக்கிறான். பிறந்த மத விருத்தியில் பாடுபடுவதும் முக்கிய கடமையாகிறது. மூன்றாவது தெய்வ சம்பந்தமானதும், மறுபிறவியில்லாத பேரின்ப வாழ்வையளிக்கக் கூடியதுமான பிரம்ஹ சாக்ஷாத் காரத்தை அடைய முயல வேண்டும். மத பக்தி தெய்வ பக்தி இரண்டுமின்றி தனி தேச பக்தி மாத்திரம் இருந்தால் நாஸ்திகத் தன்மையும், தெய்வத்திற்கு அஞ்சாமையும் ஏற்பட்டுக் கெட்டுப் போக வேண்டி வரும். உதாரணமாக ருஷியா தேசத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். தேசமின்றி மதம் நிலைக்காது. மதமின்றித் தேசமிருந்தால் நாஸ்திகம் உதயமாய்க் கெடும். இரண்டுமிருந்தும் ஞானமும் தெய்வத் தன்மையில் முயற்சியுமில்லையானால் கடவுள் கட்டளையை மீறியதாகிறது. உண்மையான ஆண்ட வனது ஆனந்தத்தை அடைய முடியாது. பற்றற்ற துறவி களுங்கூட தமது அந்தர்முகப் ப்ரஹ்ம நிஷ்டையிலிருந்து பகிர்முகத்திற்கு வந்த காலத்தில் தமது சகோதர ஜனங்களுக்குத் தன்னால் முடிகிற வரை தேசமத ஞான கைங்கர்யம் செய்து வந்திருக்கிறார்கள். பார்க்கப்பட்ட எதையும் தானா நினையுங்கள். தன்னையறிவீர்கள். அப்பால் தலைவனையுமறியத் தடையிறாது. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அவதார புருஷனாகிய புத்த பகவானது உபதேச மொழிகளைக் கவனியுங்கள்.

22-2-7. 5034 **விலக்ஷணானந்தர்**

# பரமானு சந்தானம்

1. சகல லோகங்களிலுமுள்ள சகல மதஸ்தர்களும் சகல தேவர்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய சர்வ சக்தி வாய்ந்தது எந்த வஸ்துவோ அதுவே கடவுள் என்று அனைவரும் ஏகமனதோடு ஸ்தோத்திரம் செய்யுங்கள்.

2. விடாமுயற்சி, பொறுமை, சாந்தம், வைராக்கியம், சத்தியம் இவ்வைந்தும் கடவுளை அடைவதற்கு நேரான பரம சாதனம்.

3. தன்னுடம்பு தானென்றெண்ணாத போதும் தனக்கென்றெண்ணாத சமயத்திலும் சாத்வீக சாந்தம் உதயமாகும்.

4. மனிதனை மனிதன் தாழ்வாக நினைப்பதும் நடத்துவதும் மிகவும் கோரமான காரியம். நமது புண்ணிய பாரத நாட்டு வழக்கமுமல்ல! கடவுளுக்கும் மஹரிஷிகளுக்கும் சம்மதமுமல்ல.

5. பஞ்ச மஹாபாதகங்களை அடியோடுவிட்டுவிட வேண்டும். அதையுடையவர்களது பழக்கங்களையும் விட்டுவிட வேண்டும்.

6. ஜென்ம மரணம் துக்கமென்று தெரியாதவர்களுடன் அடிக்கடி பழகக் கூடாது.

7. எல்லா விஷயங்களிலும் எல்லோரும் சுதந்தரமாயிருக்க வேண்டுமென்றெண்ணிவிடக் கூடாது. சில விஷயங்களில் சுதந்தரமும் சில விஷயங்களில் பரதந்திரமுமாயிருக்க வேண்டியிருக் கிறது.



8. குன்றிமணிக்குத் தன்குற்றமான கருப்புத் தெரியாததுபோல, தன் குற்றம் தனக்குத் தெரியாதவன் தான் பிறரைக் குற்றம் கூறுவானாதலால் தன் குற்றத்தை ஆராய்ந்து அதை விட்டுவிட முயற்சிப்பதுடன் பிறரைக் குறை கூறுதலையும் ஒழித்து விட வேண்டும்.

9. பயனற்ற சொல்லைக் கேட்டுச் சந்தோஷிப்பவன் மனிதனில் பதர் போலாகிறான்.

10. வீண்காலப்போக்கு வார்த்தைகளையும் அதிகமாகப் பேசுவதையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

11. ஸ்ரீ பகவத்கீதையும் தாரகநாமும் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டியது. கடவுளை அடைவதற்குத் தடையாயுள்ள மூலப்பிரகிருதி இருட்டைப் பிளக்கக் கூடிய பெரிய ஆயுதம்.

- ஸ்ரீ விலக்ஷணானந்தர்

ஓம்

தத் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

# பாரத தேசம்

பாரதரே இந்தியரே யென்றழைக்கும் தேசம்
பற்றில்லா ஞானியரைப் பண்டமைந்த தேசம்
ஆரணங்கள் பாடிநிதம் அகமகிழும் தேசம்
அந்தரங்க நெறிபரவி அறிவாக்குந் தேசம்
சாரணர்கள் வாலிபர்கள் சார்ந்திருக்குந் தேசம்
சத்திநிபா தத்துடையார் சங்கற்ப தேசம்
காரணங்கள் காரியங்கள் கண்டறிந்த தேசம்
கங்குல்பக லில்லாத பாரதமா தேசம்

கண்ணன் காண்டீபனுக்குக் கட்டுரைத்த தேசம்
கடவுளே கெதியென்று கதறுகின்ற தேசம்
வெண்ணைத் திருடியுண்ட வேதாந்த தேசம்
விஸ்தார வேதங்கள் விளங்கிநின்ற தேசம்
எண்ணமில்லா வாங்கிலர்கள் இங்குவந்த தேசம்
எப்படியுஞ் சுயராஜ்ய மெண்ணுகின்ற தேசம்
மண்ணிழந்து மதியிழந்து வாடுகின்ற தேசம்
வானவர்கள் தேசமிது பாரதமா தேசம்

ஆழ்வார்கள் நாயன்மார்கள் அவதரித்த தேசம்
அந்தரங்க யோகியர்கள் ஆனந்த தேசம்
ஏழ்வாயு மெட்டறிவு மெண்ணிநின்ற தேசம்
இச்சகத்தின் சுதந்திரத்தை இசையவைக்குந்தேசம்
பேழ்வாயார் பிள்ளைகளைப் பேணிநின்ற தேசம்
பின்னாலே தானாளும் பேர்பெரிய தேசம்



தாழ்வில்லாத் தத்துவத்தின் தன்மையுற்ற தேசம்
தற்பரனார் தேசமிது பாரதமா தேசம்
பசுவதனைத் தெய்வமெனப் பூசைபண்ணுந் தேசம்
பரம்பொருளின் வடிவுணர்ந்து பதியாக்கும் தேசம்
கசிமனமில் லாதவரைக் கண்டோட்டுந் தேசம்
காசினிக்கு முகம்போன்ற கருணைபெற்ற தேசம்
நிசியிரவில் நேர்ந்தாலும் நிசமருளுந் தேசம்
நிஷ்டையிலே அஷ்டகதி நேர்ந்திருக்குந் தேசம்
அசிபதத்து வுச்சியிலே ஆடுகின்ற தேசம்
அவதார தேசமிது பாரதமா தேசம்

பெண்காட்டி மண்காட்டிப் பிறிக்காத தேசம்
பின்னாலே சுகந்தேடும் பிறையான்றன் தேசம்
பண்காட்டுந் திருவுடையார் பரவிநின்ற தேசம்
பட்டமரம் போலாகப் பாவிக்குந் தேசம்
கண்கொடுத்து வழிகாட்டிக் கருணைசெய்யும் தேசம்
காலாதிக் கப்புறமுங் கடந்துநின்ற தேசம்
விண்காட்டுந் தெய்வநிலை வழிகாட்டுந் தேசம்
விதியொழித்த தேசமிது பாரதமா தேசம்
ஸ்ரீராமன் தசரதனும் செங்கோல்கொண்ட தேசம்
சிபிநளனும் புரூருவனும் தேடிவைத்த தேசம்
ஆராலும் அளப்பரிய அரிச்சந்திரன் தேசம்
அர்ச்சுனற்கு அந்தரங்க மருளியதாந் தேசம்
ஏறாம லிறங்காம லிலங்குகின்ற தேசம்
இப்படியும் போகுமோ இந்தநம தேசம்
கூறாத கூர்மைபல கொண்டமைந்த தேசம்
குறைவில்லாத் தேசமிது பாரதமா தேசம்
காந்தி திலகர்முதல் கண்களித்த தேசம்
கனவயிர நெஞ்சுள்ளார் கலந்திருந்த தேசம்
சாந்திபெருஞ் சத்துவர்கள் சார்ந்திருக்குந் தேசம்
ஜகமயக்க மேல்நாட்டார் தங்கிநின்ற தேசம்

ஆந்திரமுந் திராவிடமு மணுகிநின்ற தேசம்
ஆங்கிலரைத் துரும்பனவே அகநினைக்குந் தேசம்
ஏந்திவரும் மின்னாட்டு ளேகநின்ற தேசம்
இணைபிரியாத் தேசமிது பாரதமா தேசம்

சொல்படியே அனுபவத்தில் காட்டுகின்ற தேசம்
சுகர்முதலோர் வாழ்ந்துவந்த சுந்தரமாந் தேசம்
கல்மனத்து டயர்முதலோர் கடிந்து சுட்ட தேசம்
கண்டபடி யெண்ணுகின்ற கசடர்கள்வாழ் தேசம்
பல்வளமுங் கொள்ளைவிட்டு பரதவிக்கும் தேசம்
பற்றற்ற யோகியரைப் பாடுகின்ற தேசம்
மெல்லமெல்ல மேலெழும்பி மேவுகின்ற தேசம்
மேல்வீடு தனைமேவும் பாரதமா தேசம்

எத்தனையோ ராஜாங்கம் எண்ணிவந்த தேசம்
இதுபோல இதைநினைக்கு மேகாந்த தேசம்
சத்திபெற்று ஜகமாளும் சந்தமுற்ற தேசம்
சந்திரன்போல் வந்திலங்குஞ் சாந்தர்கள்வாழ் தேசம்
பக்தியினால் பகவானைப் பாடுகின்ற தேசம்
பார்ப்பதற்கு வெகுநலமாம் பதிவிரதைத் தேசம்
அத்திமுகன், ஆறுமுகன் அருள்நிறைந்த தேசம்
ஆனந்த தேசமிது பாரதமா தேசம்

அன்னியர்கள் கைவசமாய் ஆடிநின்ற தேசம்
ஆங்கிலர்கள் தாங்குவதை அணியாத தேசம்
சொன்னமுறை செய்கின்ற சுதந்தரமாந் தேசம்
சூதான பரவெளிக்குள் சுற்றிநின்ற தேசம்
அன்னமிடச் சொர்ணமிட வடிவைத்த தேசம்
அங்கியென வுள்ளிருந்து அறிவுறுத்துந் தேசம்
பின்னமற வுடல்முழுதும் பிரஹ்மமென்ற தேசம்
பிரியாத தேசமிது பாரதமா தேசம்



வசிஷ்டமுனி நாரதனும் வதிந்திருந்த தேசம்
வழிகாட்டுஞ் சைதன்யர் மலிந்துவந்த தேசம்
சுசிந்தமனக் கோரக்கன் கண்ணடைந்த தேசம்
கைகாட்டுந் தேசமிது கண்ணனருள் தேசம்
அசமேத நரமேத மகற்றிவைத்த தேசம்
அம்பலத்தி லாடுகின்ற வழகான தேசம்
பசிவந்தா லன்னமிடும் பால்போன்ற தேசம்
பற்றற்ற தேசமிது பாரதமா தேசம்

பட்டினத்தார் பத்ரகிரி பரவிநின்ற தேசம்
பால்போலு மிளநகையார் பற்றறுத்த தேசம்
சட்டைமுனி ஜனகரிஷி சீதனமாந் தேசம்
சங்கரற்குச் சொந்தமென்று சாட்சிசொன்ன தேசம்
மட்டடங்கா பெருஞ்ஜோதி வானவர்வாழ் தேசம்
மன்மதனாருலவிநின்ற மகிமைபெற்ற தேசம்
இட்டமுட னட்டாங்க மிசைந்து நின்ற தேசம்
இன்பரச தேசமிது பாரதமா தேசம்

சம்மதமுஞ் சம்மதமா யிலங்குகின்ற தேசம்
எல்லார்க்கும் பொதுவான ஹிந்துமத தேசம்
கொம்மைமுலைச் சிவகாமி கூடிவந்த தேசம்
கூத்துகந்த அடியார்கள் பதஞ்சலியார் தேசம்
சும்மாவே மனமடங்கிச் சுகம்பெற்ற தேசம்
சுந்தரரு மப்பர்முதல் சூழ்ச்சிபெற்ற தேசம்
அம்மாவே அப்பாவே என்றறிந்த தேசம்
ஆங்கிலர்க்கு மிடந்தந்த பாரதமா தேசம்

பெண்ணாசை மண்ணாசை விட்டகன்ற தேசம்
பிரமனுக்கு மிந்திரற்கு மறியாத தேசம்
கண்ணாளா கற்பகமே யென்றுசொல்லும் தேசம்
கனவதையும் நனவைதயுங் கடந்துநின்ற தேசம்
மண்ணாளும் புவியரசர் மதித்துநின்ற தேசம்
மந்திரத்தைத் தந்திரமாய் மாற்றிவைத்த தேசம்

எண்ணாமலெதுதனையும் இசையவைக்குந் தேசம்
ஏகாந்த தேசமிது பாரதமா தேசம்
தசரதனார் திருமைந்தன் தாசரதீ தேசம்
தத்தாத்திரேயர் சுகர் தனித்து நின்ற தேசம்
அசரவகை செடி மரங்க ளறிவுகொண்ட தேசம்
அம்பலத்திலாடுகின்ற ஆனந்த தேசம்
கசிமனத்துக் கண்ணப்பர் கலந்துவாழ்ந்த தேசம்
காணாத பேரின்பங் கண்டொழுகுந் தேசம்
பசியென்றாலு லுடல் நடுங்கும் பரமார்த்த தேசம்
பகவானார் தேசமிது பாரதமா தேசம்
பதிவிரதை யதிகமெனப் பண்ணுகின்ற தேசம்
பர்த்தாவே தெய்வமென்று பாடுகின்ற தேசம்
கதியனைத்துங் கனவெனவே தள்ளிவிட்ட தேசம்
கற்பனைக்கு மயங்காத கடவுள்தம் தேசம்
சதிபதியாய் ஜீவேசர் தமைக்கண்ட தேசம்
தட்சிணாமூர்த்தி முதற் றாங்கிவந்த தேசம்
நிதிபரவும் பரபோக நீண்டுகந்த தேசம்
நிர்குணமாந் தேசமிது பாரதமா தேசம்
ஞானப்பா லுண்டுறங்குஞ் சம்பந்தர் தேசம்
நமையெல்லா மொன்றாக்கு நாட்டமிகுந் தேசம்
ஊனப்பால் நமக்கூட்டி உறங்கவைக்குந் தேசம்
ஒன்றிரண்டு மூன்றெனவே ஓங்கார தேசம்
தானுமற்று நானுமற்றுத் தனித்திருந்த தேசம்
தத்துவத்தி னுச்சியிலே தாண்டுகின்ற தேசம்
வானம் வழிதுறக்கப் பண்ணுகின்ற தேசம்
வகைதெரியந் தேசமிது பாரதமா தேசம்
எல்லாஞ் சிவமெனவே யெண்ணுகின்ற தேசம்
எக்காலுந் தீச்செயலுக் கிசையாத தேசம்
சொல்லாலே கண்டறியுஞ் சூக்ஷுமமாந் தேசம்
சுத்தபர நாதபிந்து சொந்தமென்ற தேசம்



பொல்லாத ராக்கதரைப் புறத்தோட்டுந் தேசம்
பூரணத்தின் உள்வடிவை புகழ்ந்துநின்ற தேசம்
நல்லார்கள் தவமுறையை நாடிநின்ற தேசம்
ஞானவாள் வீசியொளிர் பாரதமா தேசம்
அனியாயக் குடிகொண்ட அரக்கர்கள்வாழ் தேசம்
அடிமைகளா யுழைத்தாலும் மறிவுபெற்ற தேசம்
இனியாவ தொருவருக்கு மடங்காத தேசம்
இச்சைவழி செல்லாத இந்தியர்வாழ் தேசம்
மனமாதி யடக்குவிக்கு மந்திரமாந் தேசம்
மனதடக்கு மடியார்கள் மலிந்திருந்த தேசம்
தனதான அகங்காரம் நழுவவிட்ட தேசம்
தந்மயமாந் தேசமிது பாரதமா தேசம்
தானே தானாண்டுகொள்ளுந் தன்மையுற்ற தேசம்
தலைவர்கட்கு அறிவுறுத்துந் தாட்டீக தேசம்
ஊனான மலமாயை யொழித்திலங்குந் தேசம்
ஒன்றுப்பட்டா லொருவரையு முறவாக்காத் தேசம்
மானாதி விழிமடவார் மயக்கறுத்த தேசம்
மன்றுணடமிடுமரசை மருவி நின்ற தேசம்
கானாற்று அம்மையரைக் கண்கண்ட தேசம்
காந்திமிகுந் தேசிது பாரதமா தேசம்
சீதையுடன் தமயந்தி ராதை யவள் தேசம்
சூடாலை லீலையவள் சுகுமார தேசம்
பாதிமதி சூடியவன் பார்வதியாள் தேசம்
பாஞ்சாலி கௌசலையாள் தேவகியாள் தேசம்
ஓது மனுசூயை யருந்ததி வாழ்ந்த தேசம்
உத்தம நளாயனியுங் கண்ணகியாள் தேசம்
சாதுசனர் மெச்சுமக சாந்தியவள் தேசம்
சங்கரனார் தேசமிது பாரதமா தேசம்
சடகோபர் புத்தரவர் சஞ்சரித்த தேசம்
சங்கரரு மத்வருடன் சாதித்த தேசம்

விடரூப எதிராஜன் விளைந்து வந்த தேசம்
வித்தியாரண்யரவர் விளையாடுந் தேசம்
வடவாலின் கீழிருந்து வழிகாட்டுந் தேசம்
வாசி மனமில்லாமல் வானாக்குந் தேசம்
திடமான அனுபவமே தெளிந்து நன்ற தேசம்
தேவாதி தேசமிது பாரதமா தேசம்

கண்ணிரண்டுங் கண்ணல்ல கண்ணென்ற தேசம்
கருத்தடக்கி வெளியாக்குங் ககனமிகுந் தேசம்
பண்ணென்ற மொழிமடவார் பரவுகின்ற தேசம்
பற்றறநின் றறிவுதனைப் பார்க்கின்ற தேசம்
புண்ணென்ற வுடலதனைப் பூணாத தேசம்
புத்தமுத வடிவான பூரணமாந் தேசம்
தண்ணென்றதரும மன்னன் வாழிகொண்ட தேசம்
தனையறிந்த தேசமிது பாரதமா தேசம்

அயல் நாட்டு நாகரீக மாகாத தேசம்
அத்தனையுஞ் செத்ததென ஆக்கிநின்ற தேசம்
ஜெயராக சுயராஜ்ய தந்திரமாந் தேசம்
சிங்கமென வெங்குமுறை சித்தாந்த தேசம்
ஒருபொருளும் வேண்டாத உண்மைமிகுந் தேசம்
உயர்வான வைதீக உத்தமமாந் தேசம்
முயலகன்மேற் கால்மிதித்து முழக்கிநின்ற தேசம்
முடிவான தேசமிது பாரதமா தேசம்

ஆறரையு மைந்தரையுந் தாண்டிநின்ற தேசம்
அத்துவித துவித நிலை கடங்காத தேசம்
கூறறியுங் குண்டலியைக் கூடி வாழ்ந்த தேசம்
குஞ்சரத்துக் கருளளித்த கூடார்த்த தேசம்
நீறணியுந் திருமண்ணு நெற்றியுறை தேசம்
நிலமகளு மலைமகளு நினைப்புவைத்த தேசம்
ஏறேறு மெம்பெருமான் இன்ப முற்ற தேசம்
ஏகாந்த தேசமிது பாரதமா தேசம்



வேதாந்தஞ் சித்தாந்தம் விளங்கிநின்ற தேசம்
மலைமகட்குஞ் சங்கரற்கு மடிமைபெற்ற தேசம்
நாதாந்த நிலையறிந்து நாடுகின்ற தேசம்
நம்புமுறை பக்திபெற நாளுமுற்ற தேசம்
வேதாவையெண்ணாத விமலநித்த தேசம்
விட்டகுறைக் காரரெலாம் விளையாடுந் தேசம்
ஈதாகு மிந்துமத மென்று சொல்லும் தேசம்
இச்சையற்ற தேசமிது பாரதமா தேசம்

பொருளெல்லாம் போனாலும் பொறுமைபெற்ற தேசம்
பூமியிதில் திலகமெனப் பூணுகின்ற தேசம்
அருள்வடிவே தெய்வமென நம்பிவந்த தேசம்
அரனார்க்குச் சொந்தமென ஆகிநின்ற தேசம்
குருவருளா லுலகநிலை கூடிவந்த தேசம்
கொண்டல்மணி வண்ணனுக்குக் குறியான தேசம்
திருவருளே துணையாகத் தேடிநிற்குந் தேசம்
தேவாதி தேசமிது பாரதமா தேசம்

சத்தியமே துணையாகச் சார்ந்துவந்த தேசம்
சாந்திநிலை யேந்திவருஞ் சத்துவர்வாழ் தேசம்
சித்தியெலாம் பொய்யென்று தள்ளுகின்ற தேசம்
ஜெகஜால வுள்மயக்கந் திரணமென்ற தேசம்
முத்தியிலே மூண்டெழும்பி மோனமுற்ற தேசம்
முன்னோர்கள் முறைவழியே செல்கின்ற தேசம்
எத்தினத்து மழியாத இறையவனார் தேசம்
ஏகாந்த தேசமிது பாரதமா தேசம்

புண்ணியமே வடிவான புத்தமிர்த தேசம்
பூரணத்தைக் காண்பதற்குப் பூண்டெழுந்த தேசம்
கண்மூன்று படைத்தவதற்கு காரியமாந் தேசம்
கசிந்தமன அடியார்கள் கலந்திருந்த தேசம்
விண்ணாலும் மண்ணாலும் விளையாத தேசம்
விண்ணவர்க்கு மண்ணவர்க்கும் நேசமுற்ற தேசம்

பண்ணாலே பரசிவனைப் பாடுகின்ற தேசம்
பரமார்த்த தேசமிது பாரதமா தேசம்

மார்த்தாண்டன் போஜன்முதல் மாட்சிபெற்ற தேசம்
மஹராஜ மஹரிஷியார் துறவுகொண்ட தேசம்
பார்த்தாலும் பிரஹ்மமென்றே பார்க்கின்ற தேசம்
பாவையரைத் தாயெனவே பாவிக்குந் தேசம்
கோர்த்தாளு முசுகுந்தன் குடிகொண்ட தேசம்
குஞ்சரத்தான் கஞ்சமலர் கூடிவந்த தேசம்
வார்த்தையிலே மதவுணர்ச்சி காட்டுகின்ற தேசம்
வானவர்வாழ் தேசமிது பாரதமா தேசம்

ஜனகாதி மஹரிஷிகள் சஞ்சரித்த தேசம்
தத்தாத்திரேயர் சுகர் சார்ந்துநின்ற தேசம்
அனகாதி பதமருளும் அந்தணர்கள் தேசம்
அகவிளக்கை மிகவிளக்கு மன்பான தேசம்
வினவாத மௌனநிலை விளங்கிநின்ற தேசம்
விவேகானந்தர் முதலோர் விளையாடுந் தேசம்
மனையறிந்த பிரமரிஷி மகிழ்ந்திருந்த தேசம்
மார்க்கண்ட னவதரித்த பாரதமா தேசம்

தட்சிணாமூர்த்தியவர் வாழியென்ற தேசம்
தசரதன்றன் மூத்தமகன் வாழிபெற்ற தேசம்
அக்ஷரத்தை அர்ச்சுனற்கு ஆக்குவித்தோன் தேசம்
ஆச்சிரமம் அறநிலையம் அமைந்திருக்குந் தேசம்
பட்சிக்கு வுடலீந்தோன் வாழிநித்ய தேசம்
பற்றில்லா ராமகிருஷ்ண பரமஹம்சா தேசம்
விட்சித்த மகரிஷிகள் வாழியென்ற தேசம்
விலக்ஷணானந்தரவர் விஸ்தார தேசம்

ஓம் தத் ஸத்

ஓம்

தத் ஓம் ஸத்

ஸ்ரீ விலக்ஷணாநந்தர் அருளிய

# வைத்தியத் திரட்டு

1. **பித்த வெடிப்புக்கு**

மருதோணி இலையைப் பசும் பாலிலறைத்து மூன்று நாள் ஆறுவேளை சாப்பிட்டு பாற்சாதம் சாப்பிட ஏழாநாள் தலைக்கு ஜலம் விட தீரும்.

2. **பல்வலி தீர**

நீர்முள்ளி விதை, வசம்பு இரண்டையும் தட்டிப் போட்டு ஜலம் வைத்துக் கஷாயம் வைத்துக் கொப்பளிக்கத் தீரும்.

3. **ஆயுதமடிபடாதிருக்க**

நத்தைசூரிச் செடிக்கு வெள்ளிக்கிழமை கன்னிநூல் காப்புக்கட்டி தூப தீபம் கொடுத்து "றங்" என்று லக்ஷம் செபம் செபித்து வேலை சிரசில் கட்டிக் கொண்டு செல்ல வேண்டும்.

4. **நீரடைப்புக்கு**

வாழைக்கிழங்கின் ஜலம் கொண்டு வந்து 2 விராகனெடை வெடியுப்புப் போட்டுச் சாப்பிட நீர்க்கட்டு தீரும்.

5. **ஒரு தலை இடிக்கு நசியம்**

சமுத்திராப்பழமும் பெருங்காயமும் சேர்த்துப் பெண் முலைப் பாலிலறைத்து குளிசை செய்து வைத்துக் கொண்டு முலைப்பாலிலறைத்து நாசியிலேவிட தீரும்.

6. **பெரும்பாடு தீர மருந்து**

நாவல், ஓதி, மருதம், மாவு, அத்தி இவ்வைந்து பட்டைகளை இடித்து எருமைத் தயிரில் ஊற வைத்துப் பிழிந்து மூன்று நாள் ஆறு வேளை சாப்பிட தீரும்.

7. **பல் புழு விலக**

கீழ்க்காய் நெல்லிக்குக் கன்னி நூல் காப்புக் கட்டி ஆதிவாரம் கட்டி பச்சரிசி கரும்பு கட்டி 'நசிமசி' யென்று நூற்றியெட்டு ஜெபித்து அவன் பேரை மூன்றுதரம் சொல்லி பல் புழுச் செத்துத் தீர வேண்டுமென்று சொல்லி வேரறாமல் பிடிங்கிவிட புழு மறுநாளிறந்து போகும்.

8. **மூல ரத்தம் நீங்க**

துத்தியிலையைச் சுத்த ஜலத்தில் 1 இரவு ஊற வைத்துக் காலையில் பிசைந்து வடித்து அத்துடன் சமமாக பசுவின் பால் விட்டுக் கலக்கி உண்ணவும். இப்படி 3, 5, 7 நாள் சாப்பிட கடைசியில் சர்க்கரை சேர்த்து உண்ண மூல ரத்தம் தாமாகவே விலகி விடும்.

9. **பெரும்பாடு தீர**

இரும்பைப் பழுக்கக் காய்ச்சி பசுவின் மோரில் தோய்த்து அதைத் சாதத்திற்குள் வேண்டிய போதெல்லாம் சாப்பிட விலகும். உஷ்ண உடம் பிற்கு கூடாது. சகல பேதியும் கட்டும்.

10. **சகல உஷ்ணத்துக்கும் பஞ்ச கல்பம்**

நெல்லிக்காய், வெண்மிளகு, கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், வேப்ப வித்து இவ்வைந்தையும் பசும்



பாலிலறைத்து பக்ஷத்திற்கொரு தரம் முழுகி வரவும். ஆகாரங்களில் பாசிப் பயரை சேர்க்கவும்.

11. **சகல ரணங்களுக்கும் ப்ளாஸ்திரி**

லிங்கம், மிருதார்ச்சிங்கிர கற்பூரம், வெள்ளை குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காசுக்கட்டி, தான்றிக்காய், இவைகளைனைத்தும் ஒரெடையாய் நிறுத்துப் பசுவெண்ணை போட்டு 1 ஜாமமறைத்துத் தண்ணீரில் மிதக்க வைத்து எடுத்து ரணங்களுக்கு பூச வேணும்.

12. **விக்கல் தீர**

சந்தனத்தூள் கட்டை சாம்பிராணி இரண்டையும் பொடி பண்ணி காகிதத்தில் வைத்துருட்டி புகைபிடிக்க விக்கல் தீரும்.

13. **வாயுக்குத்தலுக்குக் கஷாயம்**

கொடுவேலிப்பட்டை, சுக்கு, பரகிப்பட்டை, பிரப்பம் கிழங்கு வகைக்கு அரையணா எடை நாலுபடி ஜலத்திலிடித்துப் போட்டு எட்டொன்றாக வற்றக் காய்ச்சி காலை மாலை மூன்று நாள் 6 வேளை சாப்பிட நீங்கும். பத்தியம் உப்பாகாது. 5 நாள் கழித்து எல்லாம் கூட்டலாம்.

14. **எலி கடி பதினெட்டுக்கு**

கரும்பூனை மலத்தை கழற்கியளவெடுத்து, ஆலை கரும்பு முள்ளிக் காயளவு கூட்டி மூன்றுநாள் ஆறு வேளை சாப்பிடத் தீரும். உப்பு, புளி, மிளகாய் ஆகாது. ஏழாநாள் ஸ்நானம்; எட்டா நாளெலாம் கூட்டலாம்.

15. **பேய்நரி நாய்கடிக்கு**

மிளகு தக்காளி இலைச்சாறு காற்படியாக மூன்று நாள் ஆறு வேளை கொடுக்கவும். உப்பாகாது. கடிவாயில் மேற்படி இலையை அரைத்துப் பூச குணப்படும்.

16. **பூனைக்கடி தீர**

பூனை வணங்கிப் பட்டையை ஆவின்பாலி லறைத்து 3 நாள் ஆறு வேளை குடிக்கவும். உப்பு புளி கூடாது. நீலிவேரை அரைத்துக் கடி வாயில் பூச தீரும்.

17. **செய்யான் கடிக்கு**

கொல்லங்கோவைக் கிழங்கை அரைத்து பாக்களவு 6 வேளையுண்ணவும். மயிற்பீலி பொகை போடவும் தீரும்.

18. **பெருச்சாளி கடிக்கு**

அருகன்வேர் அரைத்து வெந்நீரில் கலந்து சாப்பிடத் தீரும்.

19. **தேள் விஷந்தீர**

பெரியாநங்கை வேரை அரைத்துக் கடியில் பூசி மட்டிப்பால் புகைபோடத் தீரும்.

20. **சிறு பாம்புக் கடிக்கு**

சிறுகுறிஞ்சான் வேரை வெந்நீரிலறைத்து 6 வேளை சாப்பிடவும். உப்பாகாது.

21. **குஷ்டத்துக்கு**

செவ்வரளி வேரை உலரவிட்டு குளிர்ந்த ஜலமாய் வாங்கி கும்பியிலடைத்து, 2 அவுன்ஸ் ஜலத்தில்



1 துளி தைலம்விட்டுக் கலக்கி 6 வேளை கொடுக்க வும். உப்பாகாது. புளியாகாது. எட்டு நாள் இவ்விதம் செய்யத் தீரும்.

22. **மூல ரோகத்துக்குச் சூரணம்**

தூதுவளை, மருட்கிழங்கு, கருணைக்கிழங்கு, பிரண்டை வேர், நல்லாவாரைவேர், காட்டுக் கருணை மூலம், மிலகரணை மூலம், அருகன்வேர், நீர்முள்ளிக்கிழங்கு இவைகளை உலரவிட்டு தூளாய்ச் செய்து வஸ்திரகாயஞ் செய்து 1 விராக னெடையளவு தேனில் 40 நாள் காலை மாலை கொள்ள மூலம் அடியோடு ஒழியும்,

23. **சூலைக்கு**

சங்கம் வேரை இழைத்துக் காடியில் 40 நாள் கொண்டால் சூலை வியாதி ஓடிவிடும். பத்தியமில்லை.

24. **இருமலுக்கு லேஹியம்**

களிப்பான் சார்படி 1, கொகுப்பைசார்படி 1, சங்கப் பழச்சார்படி 1, தேன் படி 1/2, பசு நெய் 1/4 படி, திப்பிலி, மிளகு, சிற்றரத்தை, கடுக்காய் வகைக்கு விராகனைந்து சூரணித்து லேஹியமாக்கி நெல்லிக் காய் அளவு 6 நாள் 12 வேளை கொள்ளும்போதே இருமலெல்லாம் ஒழியும். பத்தியமில்லை.

25. **காதடைப்புக்குத் தைலம்**

1 தோலா மிளகாய் நிறுத்து உணிநீரில் போட்டு எட்டொன்றாக, எள்ளெண்ணெய் நாழிவிட்டு 1 பலம் மிளகு அறைத்துப்போட்டு, மெழுகு பதத்தில் வடித்து ஸ்நானம் செய்து வர நீர்ச்செரிப்பு,

திமிரோதம், சோகை, மண்டைக்குத்து, மேல்வலி, சூலை, மேக வாயு, சொறி சிரங்கு, காதடைப்பு, காது குத்து இவைகள் தீரும்.

26. பற்பொடி

அரக்கு, சீனாக்காரம், துருசு, கடுக்காய், மாசிக்காய் வகைக்கு விராகனெடை நிறுத்துக் கொண்டு, அயப்பொடி விராகனெடை 3 வஸ்திரகாயம் செய்து எலுமிச்சம் பழச்சாற்றில் உலர வைத்துத் தூள் செய்து பல் துலக்கி வர பல் புழுச் சாகும், எகிறு கறையும், பல் நோவு தீரும்.

பற்குத்து, வாய்ப்புண், வாய் நாற்றம், பல் பிரகாசமாகும். முக வசியமுண்டு. பல் சம்பந்தமான பல வியாதி தீரும்.

27. தாகம் தீர

வித்துள்ள திராக்ஷை அதிமதுரம் இரண்டும் தட்டிப் போட்டு ஜலத்திலிட்டு கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

28. விஷங்களுக்கு மெழுகு

வரிக்குமட்டி பழச்சாற்றைப் பாத்திரத்திலிட்டு மை போல கிண்டி விஷந் தீண்டியவர்க்கு பசும் பயறளவு நாவில் தடவி விட்டால் விஷங்கள் ஓடிவிடும்.

29. அண்ட வாயு மெழுகு

வில்வ வேரைக் காய வைத்து குழித்தைலம் வாங்கி பாட்டிலில் வைத்து 40 நாள் ரவியில் வைத்து சுண்டைக்காயளவு தேனிற் கொடுகக சூலை யெல்லாம் போகும்.



30. ஆனைக்கால் தீர லேகியம்

கருங்குருவை, அரிசி மாவு 1/4 படி, திருகு கள்ளிப் பால் 1/8 படி, பசும்பால் 1/8 படி, தேன் 1/8 படி ஒன்றாய் கலந்து அடுப்பிலேற்றி லேகியமாக்கி கழற்சி காயளவு இருவேளை 3 மாதம் கொள்ள வேணும். விளக்கெண்ணெய் ஸ்நானம். வறுத்த உப்பு கூட்டலாம். விளக்கெண்ணெய் மறுபத்திய மிருந்து மூழ்க வேணும்.

31. இரத்தக் கொட்டலுக்கும் சீத பேதிக்கும் சூரணம்

கற்கடக சிங்கி, கிராம்பு, கருவாய்ப்பட்டை வகைக்கு விராகனென்று சிறு வறுப்பாய் வறுத்து சூரணித்து ஆறு பங்காகச் செய்து 6 வேளை வெண்ணெயில் கொடுக்கவும்.

32. சிறு பிள்ளைகள் பெருக்க நெய்

தண்ணீர்மிட்டான் சார், வெள்ளாட்டுப் பால், ஆவின் பால், தேங்காய்ப் பால், ஆவின் நெய் வகைக்கு 1/4 படி, சீனா கற்கண்டு 1 பலம் சேர்த்து அடுப்பேற்றி லேஹியமாய் வரும்போது காலை மாலை கரண்டி வீதம் கொடுக்க சகல கணமும் போய் பிள்ளை பெருத்து அழகுண்டாகும்.

33. பிள்ளை பெற மாட்டாதவர்க்கு

கீழ்க்காய் நெல்லி வளையமாக்கி ஸ்திரீயின் இடதுகாற் பெருவிரலிற் போடவும். பிள்ளை வெளி காணும். மேற்படி வேரை பசும்பாலிலறைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

34. கற்றாழை நாற்றம் நீங்க

கல் நார், காந்தை வேர், நன்னாரிமுத்து, காசு கஸ்தூரி, மஞ்சள் வகைக்கு விராகனெடைக் கலந்து அறைத்து உடம்பு முகத்தில் பூச நீங்கி விடும்.

35. வெளுத்த மயிர் கருக்கு

கொட்டை கரந்தை பூவெடுக்குமுன் சமூலம் பறித்து இதற்குச் சமனிடை கையியாந்த சமூலமும் சேர்த்து நிழலிலுலர்த்தி சூரணத்தைத் தேன் அல்லது நெய்யில் கலந்து 1 மண்டலம் சாப்பிட வெண் மயிர் கருப்பாகும்.

36. சூட்டினால் வந்த தலைவலிக்கு

கொத்தமல்லி விதையும், சந்தனமும் அறைத்துப் பூச நீங்கும்.

37. பல் நோய்கு மருந்து

சித்தரமூலத்தை யறைத்து வலது உள்ளங்காலில் தடவ இடது பக்கம் பல் வலிபோம். இடது உள்ளங் காலில் தடவ வலது பக்க பல் வலிபோம். பல் நோய், உண்ணாக்கு வளர்ச்சி, தொண்டை நோய், யீரல் இவைகளுக்கு மணத்தக்காளி செடி இலை, காய் பறித்து கியாழமிட்டு வாய் கொப்பளிக்கத் தீரும்.

38. பெண்களுக்கு வெள்ளை கண்டால்

மணத்தக்காளி, தக்காளி இரண்டும் சமமாக இலை, காய் சேர்த்து கியாழமிட்டு உள்ளுக்குக் கொடுத்து ஒன்றுப் போகும் போதெல்லாம் யோனியை இக்கியாழத்தாலம்பிவரத் தீரும்.

39. சுகபேதி கிருமி போக

விளக்கெண்ணெய் 2 அவுன்ஸ், பசும்பால் 6 அவுன்ஸ், கற்கண்டு சீனா தூள் 1 அவுன்ஸ் கலந்து சாப்பிட தீரும்.

40. பல் வலி தீர

தாளிசமத்திரியைப் பொடி செய்து பல்மீது தேய்க்க பல் வலி தீரும். ஈறு பலப்படும்.



41. வாய் வேட்டிற்கு

தாணிக்காயைச் சுட்டுச் சூரணம் செய்து சமனிடை சர்க்கரைக் கலந்து தினம் 1 விராகனெடை வெந்நீரில் சாப்பிட்டுவர வாயில் அதிக நீரொழுகல் கட்டுப் படும். கண் குளிரும்.

42. சாதாரண இருமலுக்கு

யானைத் திப்பிலியைப் பொடி செய்து தேனிற் குழைத்துச் சாப்பிட இருமல் யீளை போகும். அஜீரணத்தை மாற்றும். வயிறு உப்பிசத்தைப் போக்கும்.

43. காது வலிக்குச் சாம்பிராணி

சாம்பிராணியைப் பொடித்து எள்ளெண்ணெய் காய்ச்சி காதில் 4, 5 துளிவிட 3 வேளையில் காது வலி நீங்கும்.

44. குழந்தைகள் மருண்டது நீங்க

7 அல்லது 9 பவளத்தை குழந்தைகளிடுப்பில் கட்ட நீங்கும்.

45. ரணங்களுக்கு நாயுருவி

நாயுருவி சமூலத்தை யிடித்துச் சார் பிழிந்து யீய வெள்ளை கலந்து ரணங்கள் மேற்பூச ஆரும்.

46. மயிர் உதிராதிருக்க

நவச்சாரத்தைத் தேனிற் குழைத்துப் பூச மயிர் உதிராதிருக்கும்.

47. வெண்குஷ்ட சாந்தி

வெள்ளை பூண்டை நவாசாரத்துடனறைத்து குஷ்டத்தின் மேற்பூச வெள்ளை மாறும்.

**48. பருக்களுக்கு**

துத்தியிலையை யறைத்து பருக்களின் மேற் தடவினால் உடையும். அல்லது மேற்படி இலையை அறைத்து காடி வார்த்து கிளி கட்டினாலும் கறையும்.

**49. தாது புஷ்டிக் குடிநீர்**

இரும்பைச் சிவக்கக் காய்ச்சி ஜலத்தில் தோய்க்க. இப்படி 3 தரம் தோய்த்து வடிகட்டி அந்த ஜலத்தை 1 மண்டலம், போசனம் செய்யும்போதும், தாகத் திற்குச் சாப்பிடும்போதும், சாப்பிட்டு வந்தால் தாது புஷ்டி உண்டாகும். குடலிலுள்ள யிசுகளை அறுக் கும். ஜீரணத்தைப் பிரிக்கும். அஜீரண பேதி, அதிசார பேதி இவைகளை நீக்கும். மூலவுதிரத்தை நிறுத்தும்.

**50. தாதுபுஷ்டி சூரணம்**

நிலப்பனைக் கீழங்கை மேற்றோல் நீக்கி இடித்து வஸ்திரகாயம் செய்து சமனிடை வெள்ளைச் சர்க்கரைச் சேர்த்து நித்தியம் திருகடி பிரமாணம் சாப்பிடுவர சொறி, சிரங்கு வராது. தாது புஷ்டி அதிகரிக்கும். விந்து ஊரும்.

**51. உஷ்ண வாயுவிற்குக் கியாழம்**

21/2 பலம் சிலிதை வேரை நன்றாயிடித்து 1 படி ஜலம் விட்டு ஆழாக்கு ஜலமாக வற்ற வைத்து இருவேளை கொடுக்கத் தீரும்.

**52. பல் வலி கியாழம்**

நீலிச மூலம் இடித்து 1 படி ஜலம் விட்டு 1/8 ஆக வற்ற வைத்து 4, 5 வேளை வாய்க்கொப்பளிக்க பல் வலி தீரும்.



**53. 1. சிறுபிள்ளைகட்கு சுபானத்தில் இரத்தம் கண்டால்**
**2. வாய்ப் புண்ணுக்கு**

வில்வ இலை, துத்தியிலை, செம்பருத்தியிலை வெள்ளை வெங்காயம், சீரகம் இவை சமமாய்ப் போட்டு கியாழம் வைத்து காலை மாத்திரம் 3 வேளை கொடுக்கத் தீரும். வாய் ரணம் கண்டவர்க்கும் கொடுக்கவும்.

**54. சந்தானமில்லாதவர்க்கு**

அரசன் கொழுந்து ஆவின்பால் விட்டறைத்து கச்சக் காயளவு சாப்பிடவும்.

**55. கண் குடல் சுத்தமாக**

திருபலாதி ஊறவைத்து ஜலத்தால் காலையில் கண் கழுவுவதால், மேற்படி ஜலம் சாப்பிடுவதால் தீரும்.

**56. பாஷாண பஸ்மம் சாப்பிட்டதாலுண்டான வேக்காட்டிற்கு**

மிளகு பலம் 1, அவுரி வேர் பலம் 1, சிறுகீரை வேர் பலம் 1, திரிபுரமொித்தான் வேர் பலம் 1, இடித்துப் போட்டு 1 படி ஜலம் விட்டு 1/4 ஆக வற்ற வைத்து 3 நாள் 6 வேளை சாப்பிட தீரும்.

**57. மூல உஷ்ணம் ரத்தத்துக்கு**

1 பிடி துத்திக் கொழுந்து, வெங்காயம் அறிந்தது பலம் 1/2, பாசிப் பயிறு பலம் 1/2, அவித்தூதிய விளக்கெண்ணெய்யில் வதக்கி காலையில் 3 நாள் சாப்பிடவும். புளி, மிளகாய் 3 நாளும் கூடாது.

**58. தாது புஷ்டிக்கு**

வெள்ளை வெங்காயத்தை அரிந்து நெய்யில் வறுத்து இருவேளையும் வேளைக்கு ஒன்றாக 20 நாள் சாப்பிடவும்.

**59. விரைவாத வாயுவுக்கு**

ஆதண்டை வேர், வெண்காரம், மிளகு, நாயுருவி விதை, இவை நாலையும் பலம் ஒன்றாகச் சேர்த்து அறைத்து புன்னைக் காயளவு இருவேளையும் 7 நாள் கொள்ளவும். இச்சா பத்தியும்.

**60. வெட்டைக்கு**

தேங்காய் ஒன்று கொண்டு வந்து 1 பாக்கு, 1 பலம் புங்கம்வேர் போட்டு உரலிலிடித்து பால் பிழிந்து 1/4, 1/2 ஆழாக்கு வீதம் 3 நாள் கொடுக்கவும்.

**61. இரத்தக் கழச்சலுக்கு**

கலைமான் கொம்பை மெல்லிய தூளாகச் சீவி 1 பணவெடை எடுத்து 1/8 ஆழாக்குப் பசும் பாலில் போட்டுக் காய்ச்சி எலுமிச்சம் பழம் 1 பாதி பிழிந்து 3 நாள் 6 வேளை கொடுக்கவும்.

**62. கபரோகம் தீர**

விரை நீக்கிய கடுக்காயைப் பொடி செய்து வஸ்திரகாயமிட்டு கையான்சாற்றில் மதித்து 1/4 பலம் வீதம் 40 நாள் கொடுக்கவும்.

26-12-1943

ஓம்

தத் ஓம் ஸத்

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ குமாரதாரா வனத்தில் திருவாய் மலர்ந்தருளிய பாசுரம்

ஆண்டவா ஸ்ரீனிவாஸா அன்றியேழ் மலைமேல் வாழும்
பூண்டமால் தேவிருப புனிதனே எனது தேவே
மாண்டிடும் உலக வாசை மனதினை விட்டுயேக
தாண்டவஞ் செய்வாயுள்ளே தற்பதானந்த வாழ்வே.

குமாரா தாராவன த்திடையே குறியாய்
நினது திருவடியை சமாதி நிலையாத்
தவஞ்செய்ய தானே திங்கள் காலையிலே
உமாபதீ சனய னிந்த்ரன்
ஓரா வுளத்தே கொண்டுனது
நமாதினிடையே செல்கின்றேன்
நாதா பின்னோடு றைவாயே.

குமாரபாள யத்தினின்று
குறியோடு மலையேழ் வந்து
குமாரனாம் ஸ்ரீனிவாஸன்
கோதறும் உருவ ஞான
சமாதி யின்னிலைமை பெற்று
சத்தினி பாதமெய்த
குமாசல கன்னி தேவன்
யிரண்டிலா ஞானமம்மா.

கௌசிகமா முனிவன் தன்குலத்துதித்து
காணறிய துறவுநிலை காணபூணடு
கௌவு நிலையிலாது தவம்புரிந்து
காண்பறிய ஏழுமலை குமாரதாரா
பவமனப் பதியானான் வேங்கடேசன்

பாதமதேகதியென்று பரமாத்மாஜி
செவ்வையுற தவம் புரிவான் குமாரதாரா
சென்றிடுவான வனோடு வரவுமாச்சே.

தன்னை மறவாத நீ விஞான மெய்தி
தானாகி நிற்கின்ற போதமுற்று
உன்னைப் பின்தொடரும் உறுதியெய்தி
மோனநிலை யேழுமலை துரியமெய்தி
என்னை வர கேட்டிடவே அர்த்தநாரீ
ஈசனவன் நாமமதுபூண்டு வந்தோய்
பன்னிய பெரும்பேறு கொள்வாய்யப்பா
பிறவாத பிரம்மநிலை எய்துவாயே

இந்திரனா ரேவலினால் தேவமாதர்
எழில்கொண்டு மயக்கிடவே வந்தாரானால்
புந்தியிடை நீநின்ற புனிதமாக்கி
பூரணத்தை அசையாது நிலைக்கச் செய்வாய்
கந்தனுக்குத் திருமாமா ககன ஈசா
காணறிய குமாராவனந் தேடிவந்து
அந்தியிடை யெப்போது மிருக்கச் செய்வாய்
அற்புதனே வேங்கடவா அமர ரேறே.

நோயனைத்தும் நீங்கிடவே நொடியிலாக
நுண்ணறிவு கொண்ட பெரியோன் கண்நெஞ்சம்
தாயனைய பெருமானே வெங்கடேசா
தவம்புரிய குமாரவனம் செல்லவேண்டி
மாயவனே திருமலைவாழ் பெரிய தேவே
மழை மிருகம் தேவதைகள் வாராவண்ணம்
காய்கனிகள் தின்றுமனம் கலங்காவண்ணம்
கடுந்தவம் புரிந்திடுவோம் காத்திடாயே.

மலையேழ் வாழும் பெருமானே
மழையை நிற்க அருள்செய்வாய்
நிலையா யுனது திருவடியை
நேரே யகத்துள் பாவித்து



கலையா சமாதி தியானித்து
காணா நிற்க குமாரவனம்
வலையே எனது மாதவனே
வானம் வெளுத்து வந்திடவே.

இப்போதிருந்து மழை நின்று எழிஆர் வானநிசி நீங்கி
தப்பா மழை தானின்றிடுக தானாதிபனாம் கதிரோனும்
செப்ப வடிவத்துடன் னிலங்க தேவே வேங்கட ஈசா நினை
முப்போதினுமே எப்போதும் முயல் வேனருளா யிப்போதே.

குஞ்சர மழைக்கலந்த கோமல வேங்கடேசா
நெஞ்சில் நேர்வழி மால்தன்னை நவிந்திட ஞானமோடு
துஞ்சிடஇட பாசூர தொல்மதி அரக்கன் மான
பஞ்சவர்க்க மாகயென்றும் பரந்ததோர் பாந்தனம்மா

பாந்த நல்மலை மேல்வாழும் பகவானே ஸ்ரீனிவாஸா
ஆந்தரம் பகியத்தில் அமர்ந்து நற்குமாரதாரை
வேந்தனாய் விளங்கவேண்டி விண்ணமதி தன்னையீந்து
காத்தருள் செய்வாயந்தோ கற்பக மணியாந்தேவே.

ஏழுமாமலை யென்பார்களினிச்சையை வெறுத்து நின்று
பாழினை யகற்றிவிட்டு பரம்பர மறியச்சென்று
காழிவாய்த் துரியாதீத கதியினில் காணும் நீயே
மாள்வதி லதேயாக மலையேழு மாச்சுதம்மா
அச்சுதனே அற்புதனே அங்கை நெல்லிக் கனியெனவே
நச்சுமனம் நறுக்கிடவே நாராணா நின்திருவடிக்கே
இச்சயதேயில்லாது ஏகாந்த யோகநிலை
மெச்சிடவே யருள்செய்வாய் மேதினிக்கு நாயகனே

எண்ணெயும் தேய்த்து எண்ணம் எண்ணிலா வேங்கடேசன்
நண்ணருள் திருவடிக்கே தானது மூன்றுஞ் சேர்த்து
கர்ணதே யாகத் தியான வமலத் தினிறுத்தி
யோக மின்னே விரித்துத் தான்ஞான பக்குவமாக்குமம்மா.

செங்கையிலே சங்குடனே திகிரிவானும்
இரவிமுகமும் கதை தாங்கி ஸ்ரீனிவாசா

புங்கவனாம் நாமமது பூண்டு ஏழு
புவிதாண்டி அதீதமன துலங்குநின்னை
எங்குநினை பெருமானா யெம்மானாகி
எண்ணற்ற இடந்தனிலே காணவேண்டி
தங்கிடுவேன் குமார குகையதுள்ளே
தாங்கிடு லிருந்து திருவடி காளாச்சே.

திருவடியை மறவாத தொண்டன் வந்தேன்
தெய்வகதி தபோநிலையை தேடியுற்றேன்
மருவேர் வாழென் மாதா மார்பிலுற்று
மலையேழுக்குடையோயுய் வேங்கடேசா
திருவுருவ மைந்தோனே தேவதேவா
திகட்டா யென்குல தெய்வமணியே செம்பொன்
திருவடியை யன்றியொரு பொருளும் வேண்டேன்
தித்திக்கும் தெய்வமொழி யருள்வா யப்பா.

மந்தார மலர்சோலை குமாரதாரா
மலையினிலே ஒருநாள் தலைமேல் கையை
சிந்தாது நினையறிய செய்வித்தாய் நீ
சீனிவாச பெயரோ யெனது தேவே
கொந்தாரும் குழல் மாதா மார்பிலங்கா
கூடஸ்த முரைத்திட்ட பெருமையென்னே
வந்தாளும் தெய்வமென எண்ணி நித்யம்
மாறாது எனது குரு வடிவமம்மா.

குமார பாளையத் தினின்று
குறியோடு மலைமேற் பாடிவந்து
குமாரனாம் ஸ்ரீனிவாசன்
கோதரு முருவ ஞான
சமாதி யின்னிலைமை பெற்று
சத்தினி பாதமெய்தும்
இமாசலக் கன்னிதேவன்
யிரண்டிலா ஞானமம்மா.